தொகுதி 7, இதழ் 04

ஆகஸ்ட் 16–31, 2026

இலவச விநியோகத்திற்கு

# நியூ இந்தியா சமாச்சார்

@NISPIBIndia

PRADHAN MANTRI JAN-DHAN YOJANA

MERA KHATA BHAGYA VIDHATA






## ஜன் தன் முதல் ஜன–கண–மன வரை

மகளிருக்கு அதிகாரமளித்தல் முதல் நேரடிப் பணப் பரிமாற்றம் வரை, வங்கி–காப்பீடு–ஓய்வூதியப் பாதுகாப்பு முதல் டிஜிட்டல் பணப்பரிவர்த்தனைப் புரட்சி வரை – ஜன் தன் திட்டத்தின் 12 ஆண்டு காலப் பயணத்தில், அதன் பன்முகத் தாக்கம் மக்களை தேசிய உணர்வு மற்றும் கண்ணியத்துடன் இணைத்துள்ளது.



# உலகளவில் இந்தியப் பாதுகாப்புத் துறையின் மீது அதிகரித்து வரும் நம்பிக்கை

**'மனதின் குரல்' நிகழ்ச்சியில், தேசத்திற்குப் பெருமை சேர்க்கும் பல சாதனைகளை பிரதமர் நரேந்திர மோடி எடுத்துரைத்தார். கார்கில் வெற்றி தினத்தின் நாயகர்களுக்கு அஞ்சலி செலுத்தி அவர் 'மனதின் குரல்' நிகழ்ச்சியின் 136–வது அத்தியாயத்தைத் தொடங்கினார். மேலும், மத்தியப் பிரதேசத்தின் சிதி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட நீர் சேமிப்பு இயக்கத்தையும் அவர் பாராட்டினார். அத்துடன், இந்தியாவின் உள்நாட்டுப் பாதுகாப்பு உபகரணங்கள் துறை மற்றும் பல்வேறு ஒலிம்பியாட் போட்டிகளில் நாடு அடைந்துள்ள சாதனைகள் குறித்தும் அவர் பேசினார். 'மனதின் குரல்' நிகழ்ச்சியின் தொகுக்கப்பட்ட பகுதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன...**

- **சௌர்ய வெற்றி பயணம்:** தில்லியில் உள்ள தேசிய போர் நினைவிடத்தில் ஜூலை 14 அன்று தொடங்கிய 'சௌர்ய வெற்றி' மோட்டார் சைக்கிள் பேரணி, டிராஸில் உள்ள கார்கில் போர் நினைவிடத்தை சென்றடையும். "ஒரு பயணம், ஒரு தேசம், ஒரு மரியாதை" என்பதே இதன் செய்தியாகும்.
- **தற்சார்பு இந்தியா:** தற்சார்பு இந்தியா திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஐஎன்எஸ் மகேந்திரகிரி இந்தியக் கடற்படையில் இணைக்கப்பட்டது. அதிநவீன வசதிகள் கொண்ட இந்தப் போர்க்கப்பல் இந்தியாவிலேயே வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டுள்ளது. இதில் பயன்படுத்தப்பட்டுள்ள சாதனங்களில் 75 சதவீதத்திற்கும் அதிகமானவை உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டவை. இது வளர்ந்து வரும் 'தற்சார்பு இந்தியாவின்' வலிமைக்கு ஒரு சான்றாகத் திகழ்கிறது.
- **கூட்டு விடாமுயற்சி:** 'பினாகா' நீண்ட தொலைவு இலக்குகளை தேடித் தாக்கும் ராக்கெட்டை டிஆர்டிஓ வெற்றிகரமாகச் சோதித்துள்ளது. இந்த வெற்றி, நமது விஞ்ஞானிகள் மற்றும் பொறியாளர்களின் கூட்டு விடாமுயற்சிக்கு கிடைத்த வெற்றியாகும்.
- **புதிய உயரங்களை எட்டுதல்:** பாதுகாப்புத் தளவாட உற்பத்தி, ஏற்றுமதி அல்லது நட்பு நாடுகளுடனான அரசியல் ஒத்துழைப்பு என எதுவாக இருந்தாலும், இந்தியா தொடர்ந்து புதிய உயரங்களை எட்டி வருகிறது. இந்தியாவின் பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்பத்தின் மீதான உலகளாவிய நம்பிக்கை அதிகரித்து வருகிறது.
- **மழைநீர் சேகரிப்பு இயக்கம்:** ஒவ்வொரு மழைத்துளியையும் சேமிப்பதன் மூலம் 'மழை நீர் சேகரிப்பு' இயக்கத்தை ஒரு மக்கள் இயக்கமாக மாற்றுங்கள். 'மழைநீர் சேகரிப்பு' என்பதன் செய்தி மிகவும் எளிமையானது: மழை எங்கு, எப்போது விழுகிறதோ, அங்கேயே அதைச் சேமிக்க வேண்டும்.
- **தேசத்திற்கு பெருமிதம்:** ஜப்பான் ஓபன் பேட்மிண்டன் பட்டத்தை வென்ற முதல் இந்தியர் என்ற பெருமையை பி.வி. சிந்து பெற்றுள்ளார்; இந்தச் சாதனையை எண்ணி ஒட்டுமொத்த நாடும் பெருமிதம் கொள்கிறது. லண்டனில் உள்ள லார்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற முதலாவது சர்வதேச மகளிர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியிலும் இந்திய மகளிர் கிரிக்கெட் அணி வெற்றி பெற்றுள்ளது. இது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியாகும்.
- **விக்ரம் 1:** 'விக்ரம்–1' ஏவுகணை வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டதில் ஒவ்வொரு குடிமகனும் பெருமிதம் கொள்கின்றனர். இந்திய விண்வெளித் துறையின் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தருணத்தை நாம் அனைவரும் கண்டோம். தனியார் துறையால் உருவாக்கப்பட்ட இந்தியாவின் முதல் ராக்கெட் இதுவாகும்.
- **ஒலிம்பியாட் போட்டிகள்:** இயற்பியல், வேதியியல், உயிரியல் மற்றும் கணித ஒலிம்பியாட் போட்டிகளில் இந்தியக் குழுவினர் சிறப்பான திறனை வெளிப்படுத்தி, ஏராளமான தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களை வென்றுள்ளனர்.
- **இளைஞர் சக்தி:** நாட்டின் இளைஞர் சக்தியைக் குறித்து நான் மிகுந்த பெருமிதம் கொள்கிறேன். இந்தியாவில் ஒலிம்பியாட் மற்றும் ஹேக்கத்தான் போன்ற நிகழ்வுகளின் கலாச்சாரம் சீராக வளர்ந்து வருவது மகிழ்ச்சியளிக்கிறது. நாடு முழுவதும் உள்ள ஏராளமான இளைஞர்கள் இத்தகைய தளங்களில் ஆர்வம் காட்டி, இந்தியாவிற்குப் பெருமை சேர்ப்பார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.
- **கழிவிலிருந்து செல்வம்:** பீகாரின் சீதாமரி மாவட்டத்தில், 'கழிவிலிருந்து செல்வம்' என்ற முன்னெடுப்பின் கீழ், கழிவுப் பொருட்களை மறுசுழற்சி செய்து அழகான இருக்கைகள் உருவாக்கப்படுகின்றன. 'குறைத்தல், மறுபயன்பாடு மற்றும் மறுசுழற்சி' என்பது வெறும் முழக்கமாக மட்டுமல்லாமல், நமது வாழ்வின் ஒரு அங்கமாக மாறி வருகிறது என்பதை இந்த முயற்சி உணர்த்துகிறது.
- **லோக்தாக் ஏரி:** வானியற்பியல் ஆய்வாளர் டி. ரொனால்டோ லைஷ்ராம், புதிதாகக் கண்டறியப்பட்ட இளம் விண்மீன் மண்டலங்களின் ஒரு பெரிய தொகுப்பிற்கு, மணிப்பூரின் புகழ்பெற்ற நன்னீர் ஏரியான 'லோக்தாக் ஏரி'–ன் பெயரைச் சூட்டியுள்ளார். இந்தச் சாதனை ஒவ்வொரு இந்தியருக்கும் பெருமை சேர்க்கும் ஒன்றாகும்.
- **கதர் விற்பனை:** கடந்த 12 ஆண்டுகளில் கதர் விற்பனை ஆறு மடங்கு அதிகரித்துள்ளது. இதன் விற்பனை மதிப்பு தற்போது சுமார் 8,000 கோடி ரூபாயை எட்டியுள்ளது. வரவிருக்கும் பண்டிகைக் காலத்தில், கதர், கைத்தறி அல்லது கைவினைப் பொருட்கள் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை வாங்குமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

பிரதமரின் மனதின் குரல் நிகழ்ச்சியைக் கேட்க இந்த கியூ ஆர் குறியீட்டைக் ஸ்கேன் செய்யவும்

NEW INDIA
SAMACHAR
VOLUME 7, ISSUE 04 | AUGUST 16-31, 2026

**EDITOR IN CHIEF**
DHIRENDRA OJHA
Principal Director General,
Press Information Bureau,
New Delhi

**CHIEF CONSULTING EDITOR**
SANTOSH KUMAR

**SENIOR ASST. CONSULTING EDITOR**
PAWAN KUMAR

**ASST. CONSULTING EDITORS**
AKHILESH KUMAR
CHANDAN KUMAR CHOUDHARY

**LANGUAGE EDITORS**
SUMIT KUMAR (ENGLISH)
RAJNEESH MISHRA (ENGLISH)
NADEEM AHMED (URDU)

**SENIOR DESIGNER**
PHOOL CHAND TIWARI

**DESIGNERS**
ABHAY GUPTA
SATYAM SINGH




**CLICK TO READ NEW INDIA SAMACHAR AVAILABLE IN 13 LANGUAGES**
https://newindiasamachar.pib.gov.in/news.aspx
TO READ THE NEW INDIA SAMACHAR ARCHIVE EDITIONS CLICK
https://newindiasamachar.pib.gov.in.archive.aspx

Follow @NISPIBIndia on Twitter for regular updates on 'New India Samachar'

# உள் பக்கங்களில்...




ஜன் தன் வங்கிக் கணக்குத் திட்டம்:

மக்களைப் மையப்படுத்திய பொருளாதார முன்னெடுப்பு;

## அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான அடித்தளம்

**அட்டைப்பக்கக் கட்டுரை**

கடந்த 12 ஆண்டுகளில் நாட்டின் அணுகுமுறை மற்றும் போக்கை மாற்றி அமைத்து, பொருளாதாரப் புரட்சியை ஏற்படுத்தி வளர்ச்சியை ஊக்குவித்த மிகச் சிறந்த திட்டங்களில் ஒன்று 'பிரமரின் ஜன் தன் வங்கிக் கணக்குத் திட்டம்' (2014, ஆகஸ்ட் 28–ல் தொடங்கப்பட்டது). இத்திட்டம் சமூக–பொருளாதார மற்றும் தொழில்நுட்ப அதிகாரமளித்தலில் ஒரு மாபெரும் ஆலமரமாக வளர்ந்து, பன்முகத் தாக்கங்கள் மற்றும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. | 8-21


செய்தி சுருக்கங்கள் 4-5

'வேதியல் துறை மேம்பாட்டு திட்டம் மற்றும் பிரதமரின் விவசாயிகள் வருவாய் ஆதரவு திட்டத்தைத் தொடர மத்திய அமைச்சரவை ஒப்புதல் 6-7

தொழில்நுட்பம், புத்தாக்கம் மற்றும் சுகாதாரம்: வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான வலுவான அடித்தளம் சண்டிகருக்கு ரூ.4,700 கோடிக்கும் அதிகமான மதிப்பிலான திட்டங்களை பிரதமர் மோடி வழங்கினார் 24-25

நாட்டின் முழுமையான வளர்ச்சியின் கூட்டாளிகள்... தேசிய விளையாட்டு தினம் மற்றும் ஃபிட் இந்தியா இயக்கத்தின் 7–வது ஆண்டு விழா 30-33

13 தங்கம் உட்பட மொத்தம் 39 பதக்கங்களை இந்தியா வென்றது; 2026 காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் இந்திய விளையாட்டு வீரர்கள் நாட்டிற்குப் பெருமை சேர்த்தனர் 34-35

சிறந்த திரைப்படத்திற்கான விருதை 'ஆர்டிகிள் 370' வென்றது 2024–ம் ஆண்டுக்கான 72–வது தேசிய திரைப்பட விருதுகள் அறிவிப்பு 36-37

ஆளுமை: வீர மங்கை அவந்திபாய் லோதி – சரணடைவதை விட தியாகத்தையே அவர் தேர்ந்தெடுத்தார் 38


ரயில் போக்குவரத்தின் எதிர்காலம்:

### ஹைட்ரஜன் ரயில்



ஜிந்த் பகுதியில் சுமார் ரூ.14,700 கோடி மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்கள் தொடங்கப்பட்டன. | 22–23

துடிப்பான கிராமங்கள்

**வளர்ச்சியடைந்து வரும் கிராமங்கள்**

வளர்ச்சியடைந்த இந்தியாவுக்காக வலுவான அடித்தளம்

ஜூலை 26 அன்று 'துடிப்பான கிராமங்கள்' நிகழ்ச்சியின் பங்கேற்பாளர்களுடன் பிரதமர் மோடி கலந்துரையாடினார், 6 | 26–27




**தேசிய விண்வெளி தினம்** (ஆகஸ்ட் 23)




இந்தியாவின் முதல் தனியார் ராக்கெட்:

### 'விக்ரம்–1' வெற்றிகரமாக ஏவப்பட்டது

உலக அரங்கில் இந்தியா வலுவான இடத்தைப் பிடித்து வருகிறது; இதற்குச் சிறந்த சான்றாக இந்தியாவின் முதல் தனியார் ராக்கெட்டான 'விக்ரம்–1'–ன் வெற்றிகரமான ஏவுதல் அமைந்துள்ளது | 28 - 29

**Published:** Kanchan Prasad, Director General, on behalf of Central Bureau of Communication
**Communication Address :** Room No–1077, Soochna Bhawan, CGO Complex, New Delhi -110003.
**E-Mail : response-nis@pib.gov.in, RNI No. :** DELENG/2020/78811

# ஆசிரியர் மேசையிலிருந்து...

# பிரமரின் ஜன் தன் திட்டம்

## பொருளாதார அதிகாரமளித்தலில் வெற்றிகரமான 12 ஆண்டுகள்

**வாழ்த்துகள்!**

இந்தியாவில் நிதிசார் உள்ளடக்கத்தை உறுதிப்படுத்தும் மிக முக்கியமான திட்டங்களில் ஒன்றான பிரதமரின் ஜன் தன் வங்கிக் கணக்குத் திட்டம், ஆகஸ்ட் 28-ம் தேதியுடன் 12 ஆண்டுகளை நிறைவு செய்கிறது. கடந்த 12 ஆண்டுகளில், இந்தத் திட்டம் இந்தியாவின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்காற்றியதுடன், கோடிக்கணக்கான குடும்பங்களின் நிதிப் பரிவர்த்தனைகளை மிகவும் எளிமையாக்கியுள்ளது.

இந்தப் பயணத்தில் ஐந்து முக்கியமான மாற்றங்கள் தெளிவாகக் காணப்படுகின்றன. முதலாவது, நிதிசார் உள்ளடக்கம். இதன் மூலம் நாடு முழுவதும் 58 கோடிக்கும் அதிகமான வங்கிக் கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளன. இரண்டாவது, பெண்களுக்கு அதிகாரமளித்தல். இக்கணக்குகளில் பாதிக்கும் மேற்பட்டவை, அதாவது 32.72 கோடி கணக்குகள் பெண்களின் பெயரில் தொடங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் குடும்பத்தின் நிதி சார்ந்த முடிவுகளை எடுப்பதில் பெண்கள் சமமான பங்குதாரர்களாக உருவாகியுள்ளனர். மூன்றாவது, நேரடி பணப் பரிமாற்றம். இதன் மூலம் மானியங்கள் வழங்குவதில் இருந்த முறைகேடுகள் கட்டுப்படுத்தப்பட்டதுடன், அரசு வழங்கும் பலன்கள் நேரடியாக உரிய பயனாளிகளிடம் சென்றடைந்துள்ளன. நான்காவது, காப்பீடு மற்றும் ஓய்வூதியப் பாதுகாப்பு. இதன் மூலம் ஏழை மற்றும் பின்தங்கிய குடும்பங்களுக்கு சமூகப் பாதுகாப்பு கிடைத்துள்ளது. ஐந்தாவது, மின்னணு பணப் பரிவர்த்தனைப் புரட்சி. ரூபே அட்டைகள் மற்றும் ஒருங்கிணைந்த பணப் பரிவர்த்தனை முறை மூலம் பணமில்லா பரிவர்த்தனை கிராமங்கள் வரை விரிவடைந்துள்ளது.

இந்த மாற்றங்களின் தாக்கம் வெறும் புள்ளிவிவரங்களில் மட்டுமல்ல; சாதாரண மக்களின் தன்னம்பிக்கையிலும், சுயமரியாதையிலும் தெளிவாக வெளிப்படுகிறது. முதல் முறையாக வங்கிச் சேவையுடன் இணைந்த ஒவ்வொருவரும், இன்று நாட்டின் முதன்மைப் பொருளாதார வளர்ச்சியில் பங்காற்றும் நபர்களாக மாறியுள்ளனர்.

இதுவே பிரதமரின் ஜன் தன் வங்கிக் கணக்குத் திட்டத்தின் மிகப்பெரிய சாதனையாகும். இந்தத் திட்டம், மக்களை வெறும் வங்கிக் கணக்குடன் மட்டும் இணைக்கவில்லை; "ஜன-கண-மன" எனப்படும் தேசக் கட்டமைப்பின் உணர்வோடும் இணைத்துள்ளது. இது ஒரு சாதாரண அரசு திட்டம் மட்டுமல்ல; தன்னிறைவு பெற்ற இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தை எடுத்துரைக்கும் ஒரு வெற்றிக் கதை. அதனால்தான், இந்த இதழின் அட்டைப்படக் கட்டுரையாக இது இடம்பெற்றுள்ளது.

மேலும், 'ஆளுமை' பகுதியில், அடிபணிவதைவிட வீரமரணத்தைத் தேர்ந்தெடுத்த வீரமங்கை அவந்திபாய் லோதி பற்றிய சிறப்புக் கட்டுரை இடம்பெற்றுள்ளது. அதோடு, 72-வது தேசிய திரைப்பட விருதுகள், மத்திய அமைச்சரவையின் முக்கிய முடிவுகள், தேசிய விளையாட்டு தினம் மற்றும் ஃபிட் இந்தியா இயக்கம் (ஆகஸ்ட் 29), 2026 காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவின் சிறப்பான செயல்பாடு, தேசிய விண்வெளி தினம் (ஆகஸ்ட் 23) மற்றும் கடந்த இரு வாரங்களில் பிரதமர் திரு நரேந்திர மோடி பங்கேற்ற முக்கிய நிகழ்ச்சிகள் பற்றிய தகவல்களும் இடம்பெற்றுள்ளன.

இதழின் உள்பக்கங்களில் 'மனதின் குரல்' நிகழ்ச்சியின் சிறப்புப் பகுதி இடம்பெற்றுள்ளது. மேலும், பின்பக்க அட்டையில், ஆகஸ்ட் 16-ம் தேதி நினைவுகூரப்படும் பாரத ரத்னா அடல் பிகாரி வாஜ்பாய் அவர்களின் நினைவு நாளையொட்டி சிறப்பு அஞ்சலி இடம்பெற்றுள்ளது.

உங்களின் மதிப்புமிக்க கருத்துகள் மற்றும் ஆலோசனைகளை தொடர்ந்து எங்களுக்கு அனுப்புமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

(திரேந்திர ஓஜா)

இந்த இதழை இந்தி, ஆங்கிலம் மற்றும் மேலும் 11 இந்திய மொழிகளில் படிக்கவும், பதிவிறக்கம் செய்யவும் வசதி செய்யப்பட்டுள்ளது. https://newindiasamachar.pib.gov.in/

# மின்னஞ்சல் பெட்டி






**நியு இந்தியா சமாச்சார் சுவாரசியமான மற்றும் பயனுள்ள தகவல்களை வழங்குகிறது**

என் பெயர் பவன் குமார். நான் போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகி வருகிறேன். நியு இந்தியா சமாச்சார் இதழ் எனது அறிவை வளர்க்கிறது. இதில் இடம்பெறும் சுவாரசியமான மற்றும் முக்கியமான தகவல்கள் எனக்கு மிகவும் பயனுள்ளதாக உள்ளன. மேலும், ஒவ்வொரு இரு வாரங்களிலும் வெளியாகும் முக்கியச் செய்திகள் மற்றும் அரசின் நலத்திட்டங்கள் குறித்த ஆழமான பகுப்பாய்வுகள், எனது சிந்தனைத் திறனையும் மேம்படுத்துகின்றன.

– pawankumarpanwar2003@gmail.com

**வேளாண்மை, தொழில், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான பயனுள்ள தகவல்கள்**

நியு இந்தியா சமாச்சார் இதழின் ஆசிரியர் குழுவிற்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் இந்த இதழை தொடர்ந்து வாசித்து வரும் வாசகர். பல ஆண்டுகளாக இந்த இதழை மின்னஞ்சல் மூலம் இலவசமாகப் பெற்று வருகிறேன். எங்கள் கிராம மக்களும் இந்த இதழைப் படித்து அதில் உள்ள தகவல்களால் பயனடைந்து வருகின்றனர். அரசியல் அறிவியல் பயிலும் மாணவர்களுக்கு இது ஒரு கையேடாக விளங்குகிறது. அரசின் பல்வேறு நலத்திட்டங்கள், பெண்களுக்கு அதிகாரமளித்தல், வேளாண்மை, தொழில், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான தகவல்களை அறிந்துகொள்ள இந்த இதழ் எங்கள் மாணவர்களுக்கு மிகவும் உதவியாக உள்ளது.

– babitaborthakur59170@gmail.com

**தரமான உள்ளடக்கத்தை வழங்கும் பாராட்டத்தக்க முயற்சி**

நியூ இந்தியா சமாச்சார் இதழில் பொதுமக்களின் பங்களிப்புக்காக ஒரு சிறிய பகுதி அல்லது நிரந்தரப் பத்தியை உருவாக்கினால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். இதன் மூலம், சாதாரண மக்களும் தங்களது கருத்துகள், அனுபவங்கள், படைப்புகள் மற்றும் முக்கியமான சமூகப் பிரச்சினைகள் குறித்த தங்களது எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பைப் பெறுவார்கள். இத்தகைய முயற்சி வாசகர்களுடன் இதழின் தொடர்பை மேலும் வலுப்படுத்துவதோடு, பல்வேறு வாழ்க்கை அனுபவங்களையும் இதழில் இடம்பெறச் செய்யும். இதன் மூலம் சமூகப் பங்கேற்பு அதிகரித்து, இதழின் மீதான நம்பிக்கையும் மேலும் உயரும். தரமான உள்ளடக்கத்தை தொடர்ந்து வழங்கி வரும் உங்கள் ஆசிரியர் குழுவின் முயற்சியை நான் மனதாரப் பாராட்டுகிறேன். எனது இந்த ஆலோசனை இதழின் வளர்ச்சிக்கு மேலும் மதிப்புச் சேர்க்கும் என்று நம்புகிறேன்.

– ஷாலினி பட்நாகர்

sbhatnagar1971@gmail.com

**ஒவ்வொரு இதழையும் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்**

நான் நியு இந்தியா சமாச்சார் இதழை தொடர்ந்து வாசித்து வரும் வாசகர். இந்த இதழ் மிகவும் சிறப்பாக உள்ளது. நாட்டில் நடைபெறும் முக்கிய நிகழ்வுகளை அறிந்துகொள்ள இது எனக்கு உதவுகிறது. ஒவ்வொரு இதழும் வெளியாகும் போதெல்லாம் அதை ஆவலுடன் படிப்பேன். சிக்கலான பல்வேறு விஷயங்களையும் எளிதாகப் புரிந்துகொள்ள இந்த இதழ் எனக்கு பெரிதும் உதவுகிறது.

– kumar.mohan5699@gmail.com

Communication Address : Room No–1077, Soochna Bhawan, CGO Complex, New Delhi -110003

E-Mail: response-nis@pib.gov.in

## டெங்கு காய்ச்சலுக்கான முதல் தடுப்பூசிக்கு இந்தியா ஒப்புதல்

டெங்கு காய்ச்சலைத் தடுப்பதற்கான 'குடெங்கா' என்ற நான்கு வகை டெங்கு வைரஸ்களுக்கு எதிராகச் செயல்படும் உயிருள்ள, வீரியம் குறைக்கப்பட்ட தடுப்பூசியின் விற்பனைக்கு மத்திய அரசின் மருந்துகள் தரக் கட்டுப்பாட்டு அமைப்பு (சி.டி.எஸ்.சி.ஓ.) ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்தத் தடுப்பூசியை ஜெர்மனியைச் சேர்ந்த டகேடா ஜிஎம்பிஹெச் நிறுவனம் தயாரித்துள்ளது. டெங்கு காய்ச்சலைத் தடுப்பதற்காக இந்தியாவில் ஒப்புதல் பெற்றுள்ள முதல் தடுப்பூசி இதுவாகும். இந்தத் தடுப்பூசிக்கு ஏற்கனவே உலக சுகாதார அமைப்பின் தகுதிச் சான்றிதழ் கிடைத்துள்ளதுடன், 42 நாடுகளில் பயன்படுத்தவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதுவரை உலகம் முழுவதும் 2.4 கோடிக்கும் அதிகமான தடுப்பூசி மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன. இந்தத் தடுப்பூசியின் தரம், பாதுகாப்பு மற்றும் செயல்திறன் ஆகியவை விரிவான அறிவியல் ஆய்வின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்ட பிறகே அனுமதி வழங்கப்பட்டதாக சி.டி.எஸ்.சி.ஓ. தெரிவித்துள்ளது. 4 முதல் 60 வயது வரை உள்ளவர்களுக்கு, மூன்று மாத இடைவெளியில் இரண்டு தவணைகளாக இந்தத் தடுப்பூசி செலுத்தப்படும்.




## முன்னாள் அக்னிவீரர்களுக்கு இடஒதுக்கீடு

பல்வேறு அரசுப் பணியிடங்களுக்கான ஆட்சேர்ப்பில் அக்னிவீரர்களுக்கு இடஒதுக்கீடும், சலுகைகளும் வழங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி, மத்திய ஆயுதக் காவல் படைகள் (சி.ஏ.பி.எப்.) மற்றும் அசாம் ரைஃபிள்ஸ் படையில் காவலர் பணியிடங்களுக்கான ஆட்சேர்ப்பில் முன்னாள் அக்னிவீரர்களுக்காக புதிய பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரிவின் கீழ் காலியிடங்களில் 50 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்படுவதுடன், அதிகபட்ச வயது வரம்பில் 3 ஆண்டுகள் தளர்வு அளிக்கப்படும். முதல் கட்ட அக்னிவீரர்களாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கு, அதிகபட்ச வயது வரம்பில் 5 ஆண்டுகள் தளர்வு வழங்கப்படும். மேலும், முன்னாள் அக்னிவீரர்களுக்கு உடற்திறன் தேர்வு (பி.இ.டி.) மற்றும் எழுத்துத் தேர்விலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

### ரயில்வே ஆட்சேர்ப்பில் அக்னிவீரர்களுக்கு இடஒதுக்கீடு

- ரயில்வேயில் அரசிதழில் வெளியிடப்படாத (நான்–கெசட்டட்) பணியிடங்களுக்கான நேரடி ஆட்சேர்ப்பில், ஊதிய நிலை–1 பணியிடங்களில் 10 சதவீதமும், ஊதிய நிலை–2 பணியிடங்களில் 5 சதவீதமும் அக்னிவீரர்களுக்கு இடஒதுக்கீடு வழங்கப்படும்.
- மேலும், ரயில்வே பாதுகாப்புப் படை (ஆர்.பி.எப்.) காவலர் பணியிடங்களுக்கான ஆட்சேர்ப்பிலும் 10 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்படும்.



## அரிய வகை 'நீல ஸ்ட்ராக்லர் நட்சத்திரத்தை' கண்டுபிடித்த வானியலாளர்கள்




இந்திய வானியற்பியல் நிறுவனத்தைச் (ஐ.ஐ.ஏ.) சேர்ந்த விஞ்ஞானிகள், சர்வதேச ஆய்வாளர்களுடன் இணைந்து, தற்போது உருவாகிக் கொண்டிருக்கும் அரிய வகை 'நீல ஸ்ட்ராக்லர் நட்சத்திரத்தை' கண்டுபிடித்துள்ளனர். இந்த நட்சத்திரம், பூமியிலிருந்து சுமார் 9,500 ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்துள்ள கொலிண்டர்–261 நட்சத்திரக் கூட்டத்தில் உள்ளது. இந்த நட்சத்திரம் தனது துணை நட்சத்திரத்திலிருந்து தொடர்ந்து பொருள்களை ஈர்த்துக் கொண்டிருப்பதால், அது மேலும் அதிக வெப்பம், அதிக ஒளிர்வு மற்றும் அதிக நிறை கொண்டதாக மாறி வருவதாக ஆய்வில் தெரியவந்துள்ளது. இந்தக் கண்டுபிடிப்பு, நாசாவின் டெஸ் விண்வெளி ஆய்வுத் திட்டத் தரவுகள் மற்றும் ஐரோப்பிய தெற்கு வானியல் ஆய்வு மையத்தின் மிகப் பெரிய தொலைநோக்கி மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. சுமார் 546 கோடி ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கிய இந்த நிறை பரிமாற்றம் தற்போது வரை தொடர்ந்து நடைபெற்று வருவதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். மேலும், இந்த நீல ஸ்ட்ராக்லர் நட்சத்திரத்தின் நிறை, சூரியனின் நிறையைவிட 1.67 மடங்கு அதிகம் என்றும் அவர்கள் கண்டறிந்துள்ளனர்.

## உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை (PLI) திட்டத்தால் உற்பத்தித் துறையில்

### முதலீடு மற்றும் ஏற்றுமதி அதிகரிப்பு; 14.15 லட்சத்துக்கும் அதிகமான வேலைவாய்ப்புகள் உருவாக்கம்

உற்பத்தித் திறனை மேம்படுத்துதல், முதலீடுகளை ஈர்த்தல், ஏற்றுமதியை அதிகரித்தல் மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் ஆகிய நோக்கங்களுடன், 14 முக்கியத் துறைகளில் மத்திய அரசு செயல்படுத்தி வரும் உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை (PLI) திட்டங்கள், 2026 மார்ச் 31 வரை 2.40 லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமான முதலீடுகளை ஈர்த்துள்ளன. இந்தத் திட்டங்களின் மூலம், நேரடியாகவும் மறைமுகமாகவும் 14.15 லட்சத்துக்கும் அதிகமான வேலைவாய்ப்புகள் உருவாகியுள்ளன. மேலும், இதுவரை 15.2 லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிக மதிப்பிலான ஏற்றுமதி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கைப்பேசி உற்பத்தி: கைப்பேசி உற்பத்தி 24 மடங்கு அதிகரித்துள்ளதுடன், இறக்குமதி 77 சதவீதம் குறைந்துள்ளது. தற்போது நாட்டில் பயன்படுத்தப்படும் கைப்பேசிகளில் 99.2 சதவீதம் உள்நாட்டிலேயே தயாரிக்கப்படுகின்றன.

மருந்து விற்பனை: ரூ.3.64 லட்சம் கோடியைத் தாண்டியுள்ளது. மேலும், 1,931 வகையான மருந்துகள் மற்றும் 191 புதிய மொத்த மருந்துப் பொருட்களின் உள்நாட்டு உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது.

மருத்துவ உபகரணங்கள்: இத்திட்டத்தின் மூலம் சி.டி. ஸ்கேன் கருவி, எம்.ஆர்.ஐ. கருவி, கேத் லேப் மற்றும் அல்ட்ராசவுண்ட் கருவிகள் ஆகியவற்றின் உள்நாட்டு உற்பத்தி அதிகரித்துள்ளது. இதுவரை 55 வகையான மருத்துவ உபகரணங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.






## 'குஷா' ஏவுகணை வெற்றிகரமாகச் சோதனை



பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (டி.ஆர்.டி.ஓ.) 2026 ஜூலை 23 அன்று ஒடிசா கடற்கரையில் உள்ள டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் தீவிலிருந்து, 'குஷா' நீண்ட தொலைவு தரையிலிருந்து வானில் உள்ள இலக்கைத் தாக்கும் ஏவுகணையை முதல் முறையாக வெற்றிகரமாக சோதித்து பார்த்தது. இந்தச் சோதனையில், அதிவேகமாகவும் அதிக உயரத்திலும் பறக்கும் வான்வழி அச்சுறுத்தலை உருவகப்படுத்திய மின்னணு இலக்கு பயன்படுத்தப்பட்டது. அந்த இலக்கை ஏவுகணை துல்லியமாக இடைமறித்து அழித்தது. 'குஷா' ஏவுகணை அமைப்பு, போர் விமானங்கள், ஏவுகணைகள், ஆளில்லா வானூர்திகள் (யு.ஏ.வி.) மற்றும் பெரிய எதிரி விமானங்கள் உள்ளிட்ட பல்வேறு வான்வழி அச்சுறுத்தல்களை, பல்வேறு தூரங்களிலும் உயரங்களிலும் செயலிழக்கச் செய்யும் திறன் கொண்டது.

## 2026 சர்வதேச அறிவியல் மற்றும் கணித ஒலிம்பியாட் போட்டிகளில்

### இந்தியாவின் வரலாற்றுச் சாதனை




2026-ம் ஆண்டில் நடைபெற்ற இயற்பியல், வேதியியல், உயிரியல் மற்றும் கணிதம் ஆகிய சர்வதேச ஒலிம்பியாட் போட்டிகளில் இந்திய மாணவர்கள் உலக அரங்கில் சிறப்பான சாதனையைப் படைத்துள்ளனர். இந்த நான்கு போட்டிகளிலும் இந்தியா மொத்தமாக 12 தங்கப் பதக்கங்களையும், 7 வெள்ளிப் பதக்கங்களையும் வென்றுள்ளது. குறிப்பாக, இயற்பியல் மற்றும் வேதியியல் ஒலிம்பியாட் போட்டிகளில் பங்கேற்ற அனைத்து இந்திய மாணவர்களும் தங்கப் பதக்கம் வென்றது வரலாற்றுச் சாதனையாகும். இந்த வெற்றி, அறிவியல் மற்றும் கணிதத் துறைகளுக்கான தேசிய ஒலிம்பியாட் பயிற்சித் திட்டத்தின் செயல்திறனை எடுத்துக்காட்டுகிறது. இந்தத் திட்டம் அணுசக்தித் துறையின் ஆதரவுடனும், ஹோமி பாபா அறிவியல் கல்வி மையத்தின் நிபுணத்துவ வழிகாட்டுதலுடனும் செயல்படுத்தப்படுகிறது.

கடந்த 40 ஆண்டுகளுக்கு நெருக்கமாக, அணுசக்தித் துறை நாட்டின் திறமையான இளைஞர்களைக் கண்டறிந்து அவர்களின் திறமையை வளர்ப்பதற்காக தொடர்ந்து நிறுவன ரீதியான ஆதரவை வழங்கி வருகிறது. இதன் மூலம் அவர்கள் சர்வதேச அளவிலான போட்டிகளில் சிறப்பாகப் பங்கேற்று வெற்றி பெறும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.



மத்திய அமைச்சரவை முடிவுகள்

# ரசாயனத் துறை மேம்பாட்டுத் திட்டத்திற்கு ஒப்புதல் மற்றும் பிரதமரின் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தை தொடர முடிவு

**ரசாயனப் பொருட்கள் உற்பத்தித் துறையில் இந்தியாவை உலகின் முன்னணி நாடாக மாற்றுவதில் மத்திய அரசு உறுதியாக செயல்பட்டு வருகிறது. அந்த நோக்கத்தை முன்னெடுத்து, நாட்டின் வேதியியல் மற்றும் பெட்ரோ ரசாயனத் துறையின் வளர்ச்சியை மேலும் வலுப்படுத்தும் முக்கிய நடவடிக்கையாக ரசாயனத் துறை மேம்பாட்டுத் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. மேலும், பிரதமரின் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தை 2026–27 முதல் 2030–31 வரை தொடர்ந்து செயல்படுத்தவும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதனுடன், பல்வேறு முக்கியமான முன்மொழிவுகளுக்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.**

முடிவு: நாட்டில் ரசாயன உற்பத்திக்காக அர்ப்பணிக்கப்பட்ட மூன்று சிறப்பு வேதியியல் பூங்காக்களை அமைப்பதற்கான இந்திய தொழில்துறை வளர்ச்சித் திட்டம் அல்லது ரசாயன துறை மேம்பாட்டுத் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

பயன்: இந்தத் திட்டம் 2026–27-ம் நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது. இதற்காக ரூ.3,030 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் 2026–27 முதல் 2030–31 நிதியாண்டு வரை, மொத்தம் ஐந்து ஆண்டுகள் செயல்படுத்தப்படும்.

- இந்தத் திட்டம் மூலம், வேதியியல் துறையில் மூலப்பொருள் தயாரிப்பு, அவற்றை பயன்படுத்தி பொருட்கள் உற்பத்தி செய்தல் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைத் தொழில்கள் ஆகிய அனைத்தும் ஒருங்கிணைந்து வளர்ச்சி பெறும்.
- உற்பத்திச் செலவுகளில் போட்டித்தன்மை மேம்படும்; இது உலக அரங்கில் இந்திய ரசாயனத் துறையை அதிக போட்டித்தன்மை கொண்டதாக மாற்றும்.
- இந்திய ரசாயனத் துறை உலகளாவிய ரசாயனத் தொழில்துறைகளுடன் சிறந்த ஒருங்கிணைப்பை எட்டும்; ஏற்றுமதி ஊக்குவிக்கப்படும் மற்றும் இறக்குமதியைச் சார்ந்திருக்கும் நிலை குறைக்கப்படும்.
- சுற்றுச்சூழலுக்கு உகந்த தொழில்சார் சூழலமைப்பின் மூலம் நிலையான தொழில் வளர்ச்சி ஊக்குவிக்கப்படும்.

மத்திய அமைச்சரவை முடிவுகள் குறித்த செய்தியாளர் சந்திப்பைக் காண க்யூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்

முடிவு: 2026–27 முதல் 2030–31 வரையிலான காலக்கட்டத்தில் பிரதமரின் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தைத் (பிரதமரின் கிசான் திட்டம்) தொடர்ந்து செயல்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டது.

தாக்கம்: இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதியுதவி, விதைகள், உரங்கள், நீர்ப்பாசனம், விவசாய இயந்திரங்கள் மற்றும் பிற விவசாயத் தேவைகளுக்காக விவசாயிகள் சரியான நேரத்தில் முதலீடு செய்ய உதவுகிறது. இது விவசாயிகளின் உற்பத்தித் திறனை அதிகரித்துள்ளதுடன், முறைசாரா கடன் மூலங்களைச் சார்ந்திருப்பதைக் குறைத்து, கிராமப்புறக் குடும்பங்களின் பொருளாதார நிலையை வலுப்படுத்தியுள்ளது.

- மொத்தம் ரூ.3.15 லட்சம் கோடி நிதி ஒதுக்கீட்டிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
- இத்திட்டத்தின் கீழ், தகுதியுள்ள நிலம் வைத்திருக்கும் விவசாயக் குடும்பங்களுக்கு ஆண்டுக்கு ரூ.6,000 நிதியுதவி வழங்கப்படுகிறது; இத்தொகை மூன்று தவணைகளாக அவர்களின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக செலுத்தப்படுகிறது.
- இதுவரை, 23 தவணைகளில் ரூ.4.47 லட்சம் கோடிக்கும் அதிகமான தொகை விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக செலுத்தப்பட்டுள்ளது.

மத்திய அமைச்சரவை முடிவுகள் குறித்த செய்தியாளர் சந்திப்பைக் காண க்யூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்



முடிவு: மின்சக்தி சேமிப்பு அமைப்புமுறைகளுடன் கூடிய மிதக்கும் சூரிய ஒளி மின்தகடுகள் திட்டங்களை மேம்படுத்துவதற்கான பிரதமரின் சூரிய நீர்மின் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

தாக்கம்: இந்தத் திட்டத்தின் கீழ் 5000 மெகாவாட் திறன் கொண்ட மிதக்கும் சூரிய ஒளி மின்தகடுகள் திட்டங்கள் மேம்படுத்தப்படும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறனை அதிகரிக்கவும், தேசிய எரிசக்தி, பருவநிலைச் சார்ந்த குறிக்கோள்களுக்கு ஆதரவளிக்கவும் இந்தத் திட்டம் உறுதுணையாக இருக்கும்.

- இத்திட்டம் புதுபிக்கத்தக்க எரிசக்தித் திறனை அதிகரிப்பதற்கும், தேசிய எரிசக்தி மற்றும் பருவநிலை இலக்குகளை அடைவதற்கும் பங்களிக்கும்.
- வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான தொலைநோக்குப் பார்வையை முன்னெடுத்துச் செல்வதுடன், நீர் ஆதாரங்களின் முறையான பயன்பாட்டிற்கு இந்தத் திட்டம் வழிவகைச் செய்யும்.
- இத்திட்டம், அனைத்து மாநிலங்களுக்கும், யூனியன் பிரதேசங்களுக்கும் பலன் அளிப்பதுடன், ஏராளமான வேலை வாய்ப்புகளையும் உருவாக்கும். இந்தத் திட்டத்திற்காக மொத்தம் 5,070 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முடிவு: கர்நாடகா, ஆந்திரப்பிரதேசம் இடையே, பல்லாரி–குண்டக்கல் ரயில் வழித்தடத்தில் மூன்றாவது மற்றும் நான்காவது ரயில் பாதைகளை அமைக்கும் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது

தாக்கம்: 1,264 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்தத் திட்டத்தை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. 2028–29–ம் ஆண்டு வாக்கில் இதை நிறைவுச் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வழித்தடங்களின் விரிவாக்கம், ரயில்களின் சீரான இயக்கத்தை உறுதி செய்வதுடன் இந்திய ரயில்வேயின் இயக்கச் செயல்திறனையும், சேவையின் நம்பகத்தன்மையையும் கணிசமாக மேம்படுத்தும். ரயில்களின் இயக்கத்தை சீர்படுத்துவதிலும், நெரிசலைக் குறைப்பதிலும் இந்தக் கூடுதல் ரயில் பாதை அமைக்கும் திட்டம் முக்கிய பங்கு வகிக்கும்.

- இந்தத் திட்டம் மூலம் தற்போது பயன்பாட்டில் உள்ள இந்திய ரயில்வேயின் கட்டமைப்பில் கூடுதலாக சுமார் 46 கிலோ மீட்டர் அதிகரிக்கும்.
- ஆண்டுக்கு 16 மில்லியன் டன் கூடுதல் சரக்குகளைக் கையாளும் திறனை இந்தத் திட்டம் உறுதி செய்வதுடன், சரக்குப் போக்குவரத்து செலவில் வருடத்திற்கு தோராயமாக 149 கோடி ரூபாய் சேமிக்கப்படும்.
- சுமார் ஏழு லட்சம் பேர் பயனடையும் வகையில், ஏறத்தாழ 99 கிராமங்களுக்கான ரயில் இணைப்பு மேம்படுத்தப்படும்.
- மேம்படுத்தப்பட்ட ரயில் வழித்தடம், பல்லாரி கோட்டை, ஸ்ரீ குமாரசுவாமி ஆலயம் உட்பட நாட்டின் ஏராளமான முக்கிய சுற்றுலாத் தலங்களுக்கான இணைப்பை வலுப்படுத்தும்.
- இந்தத் திட்டத்தின் மூலம் ஆண்டுக்கு 13.2 மில்லியன் லிட்டர் எரிவாயு சேமிக்கப்படும். மேலும், 2.7 மில்லியன் மரங்களை நடுவதற்கு சமமாக, 66.7 மில்லியன் கிலோ கரியமில வாயு வெளியேற்றத்தை இந்தத் திட்டம் குறைக்கும்.

முடிவு: திருத்தியமைக்கப்பட்ட கேலோ இந்தியா திட்டத்திற்கும், தேசிய விளையாட்டு கூட்டமைப்புகளுக்கான மேம்படுத்தப்பட்ட உதவித் திட்டங்களுக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டது

தாக்கம்: 2026–27 முதல் 2030–31 வரையிலான காலக்கட்டத்திற்கு 36,441 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகை, முந்தைய கேலோ இந்தியா திட்டத்திற்கான ஒதுக்கீட்டை விட சுமார் எட்டு மடங்கு அதிகமாகும்.

- இந்தப் புதிய முன்முயற்சி, விளையாட்டு உள்கட்டமைப்பை வலுப்படுத்தும். இந்தத் திட்டத்தின் கீழ் தேசிய விளையாட்டு கூட்டமைப்புகளுக்கு அளிக்கப்படும் ஆதரவு அதிகரிக்கும்.
- திறன் கட்டமைப்பிற்கு நிதியுதவி வழங்கப்படுவதுடன், தடகள வீரர்கள் புதிய உயரங்களை அடையவும் தங்கள் திறமைகளை உலக அரங்கில் வெளிப்படுத்தவும் உதவும் வகையில் வெளிநாட்டு வல்லுநர்களின் நிபுணத்துவம் பயன்படுத்தப்படும்.

முடிவு: 'சமுத்திர மந்தன்' என்ற தேசிய கடல்சார் ஆய்வுத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது

தாக்கம்: 'சமுத்ர மந்தன்' என்பது நாட்டின் கடல்சார் எரிசக்தி வளங்களைப் பயன்படுத்திக்கொள்ளவும், நீண்டகால எரிசக்திப் பாதுகாப்பை வலுப்படுத்தவும், தொழில்நுட்பத் திறன்களை மேம்படுத்தவும், பொருளாதாரத்திற்கும், வருங்கால சந்ததியினருக்கு நிலையான மதிப்பை உருவாக்கவும் வடிவமைக்கப்பட்ட ஒரு தேசிய முன்முயற்சியாகும்.

- இந்தத் திட்டம், கடல்சார் ஆய்வு நடவடிக்கைகளை ஊக்குவிக்கும். உள்நாட்டு எண்ணெய், எரிவாயு உற்பத்தியை ஊக்குவிப்பதுடன், பெருமளவிலான வேலை வாய்ப்புகளையும் உருவாக்கும்.
- அதேவேளையில், 'இந்தியாவில் உற்பத்தி செய்தல்', 'வளர்ச்சியடைந்த இந்தியா' முன்முயற்சியின் கீழ் உள்நாட்டு உற்பத்தி வலுப்படுத்தப்படும்.
- நிதியாண்டு 2030– 31 வரை, இந்தத் திட்டத்திற்கு 84,084 கோடி ரூபாய் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.



*நம் நாட்டின் விவசாய சகோதர சகோதரிகளின் முன்னேற்றத்திலும், செழிப்பிலும் நாம் உறுதி பூண்டுள்ளோம். இந்நிலையில், பிரதமரின் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தை 2030–31 வரை நீட்டிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கை, விதைகள், உரங்கள், வேளாண் செயல்பாடுகள் உள்ளிட்ட தங்கள் தேவைகளை விவசாயிகள் பூர்த்தி செய்ய ஆதரவளிப்பதுடன், அவர்களது பொருளாதார நிலையையும் மேம்படுத்துகிறது.*
*– பிரதமர் திரு. நரேந்திர மோடி*

12 ஆண்டுகள்
ஜன் தன் திட்டம்

அட்டைப்பக்கக் கட்டுரை




**ஜன் தன் வங்கிக் கணக்குத் திட்டம்**

## மக்களை மையப்படுத்திய ஒரு பொருளாதார முன்முயற்சி

# அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியின் அடித்தளம்

**கடந்த 12 ஆண்டுகளில் வளர்ச்சியை மேம்படுத்தி, நாட்டின் அணுகுமுறையையும், போக்கையும் மாற்றியமைத்து, பொருளாதார சீர்திருத்தத்திற்கு வித்திட்ட ஆற்றல்வாய்ந்த திட்டங்களில் ஒன்றுதான், 2014 ஆகஸ்ட் 28 அன்று அறிமுகப்படுத்தப்பட்ட பிரதமரின் ஜன் தன் வங்கிக் கணக்குத் திட்டம். சாமானிய குடிமகனுக்கும் அதிகாரம் அளிக்கும் தொலைநோக்குப் பார்வையுடன் தொடங்கப்பட்ட இந்தத் திட்டம், நாட்டின் பொருளாதார வளங்கள் ஏழை மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதை உறுதி செய்கிறது. ஜன் தன் வங்கி கணக்கு திட்டத்தின் விதை, சமூகப் பாதுகாப்பு, தொழில்நுட்ப முன்னேற்றத்தின் ஆற்றல் வாய்ந்த ஆலமரமாக வளர்ந்து, மாற்றங்களின் வாயிலாக என்றும் அழியாத தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது....**

**1**

சத்தீஸ்கர் மாநிலத்தின் ஜஷ்பூர் மாவட்டத்தில் ஆறு பேர் கொண்ட குடும்பத்தின் உறுப்பினராக உள்ள லீலா பாய் போர்டே, ஒரு விவசாயி. கடந்த 2015-ல், அவரது கிராமமான கர்மிடிகரா அருகில் இருந்த வங்கி, ஏழு கிலோமீட்டர் தொலைவில் இருந்தது. அவரது குடும்பத்தில் எவரிடமும் வங்கிக் கணக்கு இல்லை. அந்தக் கிராமத்திற்கு வந்த வங்கி பிரதிநிதி ஒருவர், ஒரு சிறிய கையடக்கக் கருவியைப் பயன்படுத்தி லீலா பாயின் வங்கிக் கணக்கைத் துவக்கினார். பின், ஆயுள் காப்பீட்டுத் திட்டத்திற்கான படிவத்தை லீலா பாய் பூர்த்தி செய்யவும் அவர் உதவினார். அதே வருடம், வெப்ப வாதத்தால் அவரது கணவர் உயிரிழந்தார். ஆதரவற்ற உணர்வுடன், ஆழ்ந்த மன உளைச்சலுக்கும் நிதி சார்ந்த இன்னல்களுக்கும் அவர் ஆளானார். வங்கிப் பிரதிநிதிக்கு அவரது நிலை குறித்து தகவல் தெரிவிக்கப்பட்டதும், சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் உள்ள காப்பீட்டுப் பயன்கள் குறித்த விவரங்களை லீலா பாய்க்கு அவர் விளக்கினார். அவரது இல்லத்திற்குச் சென்று தேவையான படிவங்களைப் பூர்த்தி செய்ய லீலாபாய்க்கு உதவியதுடன், அலுவலகத்திலும் அதனைச் சமர்ப்பித்தார். இதன் விளைவாக, லீலா பாயின் வங்கிக் கணக்கில் இரண்டு லட்சம் ரூபாய் வரவு வைக்கப்பட்டது. இத்தகைய நெருக்கடியான காலகட்டத்தில், அந்த நிதியுதவி அவருக்கு ஒரு வாழ்வாதாரமாகவும், முன்னேறுவதற்கான வழியாகவும் அமைந்தது.



**2**

மத்தியப் பிரதேசத்தின் குவாலியரில் உள்ள பனிஹார் கிராமத்தில் வசிக்கும் கஜேந்திர சிங், 2014 ஆகஸ்ட் மாதத்தில் பிரதமரின் ஜன் தன் வங்கிக் கணக்குத் திட்டத்தின் கீழ் வங்கிக் கணக்கைத் தொடங்கினார். அதற்கு முன் அவரிடம் எந்த ஒரு வங்கிக் கணக்கும் இல்லை; வங்கி அமைப்புமுறை குறித்தும் அவர் அறிந்திருக்கவில்லை. அவர் ஒரு விளிம்புநிலை விவசாயி. சென்ட்ரல் பாங் ஆஃப் இந்தியாவின் பராய் கிளையில் வங்கிக் கணக்கைத் துவக்கியதும், கஜேந்திர சிங் அதைப் பயன்படுத்தத் தொடங்கினார். வங்கிக் கணக்கின் பயன்கள் குறித்து அண்டை கிராமங்களில் அவர் விழிப்புணர்வையும் ஏற்படுத்தினார். நிதி உள்ளடக்கம் குறித்த அவரது புரிதலும் கணிசமாக அதிகரித்துள்ளது.

மனநிறைவு, சுயமரியாதை, கண்ணியம் ஆகிய உணர்வுகளைக் கொண்ட பிரதமரின் ஜன் தன் வங்கிக் கணக்குத் திட்டப் பயனாளிகளின் வெற்றிக் கதைகள், வெறும் வங்கிக் கணக்குத் தொடங்குவதையும் தாண்டி விரிந்து செல்கின்றன. கடந்த 12 ஆண்டுகளில், இந்தக் கதைகள், சமூக- பொருளாதாரச் சூழலில் ஒரு மாற்றகரமான யுகத்தின் சான்றாகத் திகழ்கின்றன. எந்த ஒரு சமூகத்திலும், வலிமையான பொருளாதாரம், புரட்சிகரமான மாற்றத்திற்கு உந்துசக்தியாக அமைகிறது. அத்தகைய பொருளாதாரத்தில் நிதி பாதுகாப்பின் அடித்தளமாக வங்கிக் கணக்குகள் விளங்குகின்றன. ஜன் தன் வங்கிக் கணக்குத் திட்டத்தின் தாக்கம், வங்கிக் கணக்குகளைத் தொடங்குவதுடன் மட்டும் நின்றுவிடுவதில்லை; அதன் 12 ஆண்டுகால பயணத்தில், பல்வேறு நிலைகளில் குறிப்பிடத்தக்க நீண்ட கால மாற்றங்களுக்கு இத்திட்டம் வித்திட்டுள்ளது. சமூக, பொருளாதார, தொழில்நுட்ப, சர்வதேச நிலைகளில் இந்தியாவின் தோற்றத்தை இந்தத் திட்டம் மாற்றியமைத்துள்ளது.

ஏழைகள், வங்கிக் கணக்குகள் இல்லாத மக்களை, வங்கி, நிதி சேவைகளுடன் இணைத்து, அவர்களை வறுமையிலிருந்து மீட்டெடுக்கும் நோக்கத்துடன், 2014 ஆகஸ்ட் 15 அன்று ஜன் தன் திட்டம் அறிவிக்கப்பட்டது. அறிவிப்பு வெளியான 15 நாட்களுக்குள்ளாகவே இந்தத் திட்டம் அமலுக்கு வந்தது. பொதுமக்களை மையமாகக் கொண்ட பொருளாதார முன்முயற்சியின் அடித்தளமாக விளங்கும் இந்தத் திட்டம், "ஒவ்வொரு குடும்பம்" என்ற அணுகுமுறையைக் கடந்து, "ஒவ்வொரு வயது வந்த நபரும்" வங்கிக் கணக்கு வைத்திருப்பதை உறுதி செய்தது. ஏழைகள், வங்கிக் கணக்குகளுக்கான அணுகலைப் பெறுவது சாதாரண நடவடிக்கையாக இருந்தாலும், அது அவர்களது சுயமரியாதை உணர்வைத் தூண்டியது. பின்தங்கிய பிரிவினர் கூட, லட்சக்கணக்கான கோடி ரூபாய் மதிப்பிலான சேமிப்பிற்குப் பங்களித்துள்ளனர்.

2014-ல், திரு நரேந்திர மோடி பிரதமராகப் பதவியேற்றபோது, அவர் நாட்டின் அமைப்புமுறைகளை மிகக் கவனமாக ஆய்வு செய்தார்.

நல்லாட்சி மற்றும் தொலைநோக்குப்






பார்வைச் சார்ந்த தனது முந்தைய அனுபவத்தின் அடிப்படையில், சமூக–பொருளாதார ஏணியின் மிகக் கடைசிப் படியில் உள்ளவர்களுக்குக் கூட அதிகாரம் அளித்து, அவர்களின் நிதிப் பாதுகாப்பிற்கான ஒரு கட்டமைப்பை உருவாக்குவதற்கும் அவர் முறையான நடவடிக்கைகளை மேற்கொண்டார். பிரதமரின் ஜன் தன் வங்கிக் கணக்குத் திட்டம், இந்த அனைத்து முன்முயற்சிகளுக்கும் அடித்தளமாக மாறியது. வங்கிச் சேவைகளை ஏழை மக்களின் வீடுகளுக்கே கொண்டு செல்லும் ஒரு தனித்துவமான முன்முயற்சி அறிமுகப்படுத்தப்பட்டது. மக்களின் பணம்– முறையாக அவர்களுக்குச் சேர வேண்டிய பணம்– அவர்களை நேரடியாகச் சென்றடைய வேண்டும் என்பதே இதன் குறிக்கோளாகும். இந்த விரிவான தொலைநோக்குப் பார்வையுடன், ஜன் தன் வங்கிக் கணக்கு, ஆதார், கைப்பேசி இணைப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு வலிமையான அமைப்புமுறையை மத்திய அரசு உருவாக்கியதன் மூலம்,ஏழைகளுக்கான நிதி முறைகேடாக பயன்படுத்தப்படுவதை முடிவுக்குக் கொண்டு வரமுடிந்தது. வீட்டு கட்டுமானத்திற்கான நிதி, சமையல் எரிவாயு மானியம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட ஊதியம், விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்ட நிதி உள்ளிட்ட அனைத்து நிதியும், தற்போது பயனாளிகளின் வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாகப் பரிமாற்றம் செய்யப்படுகிறது. அதாவது, எந்தவித வேறுபாடும் இன்றி, அனைவரும் நேரடிப் பலன்களைப் பெற்றுப் பயனடைகின்றனர். ஸ்டாண்ட் அப் இந்தியா, ஸ்டார்ட் அப் இந்தியா, முத்ரா போன்ற திட்டங்களின் பயனாளிகளுக்கு அதிகாரம் அளிப்பதற்காக, அவர்களை இணைக்கும் அமைப்புமுறை ஒன்று உருவாக்கப்பட்டது. சமூகப் பொருளாதார பாதுகாப்பை உறுதி செய்து, தொழில்முனைவை ஊக்குவிக்கும் அனைத்துத் திட்டங்களின் அடித்தளமாகவும் பிரதமரின் ஜன் தன் திட்டம் மாறியது.

"ஒரு வங்கிக் கணக்கை கொண்டு ஏழையால் என்ன செய்ய

# பிரதமரின் ஜன் தன் வங்கிக் கணக்குத் திட்டக் கணக்குகளின் சிறப்பம்சங்கள்

பிரதமரின் ஜன் தன் வங்கிக் கணக்குத் திட்டக் கணக்குகள், அடிப்படை வங்கி சேமிப்புக் கணக்குகளாக செயல்படுகின்றன. முழுமையான கே.ஒய்.சி விதிமுறைகளுக்கு உட்பட்ட வங்கிக் கணக்குகளில், இருப்புத்தொகை அல்லது பரிவர்த்தனை மதிப்புக்கான எந்தக் கட்டுப்பாடுகளும் இல்லை.

வங்கிக் கிளைகளிலும், ஏடிஎம்/சிடிஎம் இயந்திரங்களிலும் பணத்தை செலுத்தலாம்.

எந்த ஒரு மின்னணு முறையிலும் அல்லது மத்திய/மாநில அரசுகளால் வழங்கப்பட்ட காசோலைகளை செலுத்தி/ வசூலித்தும், நிதியைப் பெறலாம் அல்லது வரவு வைக்கலாம்.

ஒரு மாதத்தில் செலுத்தப்படும் தொகையின் அளவு அல்லது மதிப்பிற்கு எந்த வரம்பும் இல்லை.

எந்த ஒரு ஏடிஎம் இயந்திரத்தில் இருந்தும் பணம் எடுப்பது (மெட்ரோ ஏடிஎம்களும் இதில் அடங்கும்) உட்பட, மாதந்தோறும் குறைந்தபட்சம் நான்கு முறை கட்டணமில்லாமல் பணம் எடுத்துக் கொள்ளலாம்.

2 லட்சம் ரூபாய் விபத்துக் காப்பீட்டுடன் கூடிய இலவச ரூபே பற்று அட்டை வழங்கப்படுகிறது.

*பிரதமரின் ஜன் தன் திட்டம் வெற்றி பெற பணியாற்றியவர்களின் அயராத முயற்சிகளைப் பாராட்டுகிறேன். இந்தியர்களின் வாழ்க்கை தரம் மேம்படுவதை, அவர்களது முயற்சிகள் உறுதி செய்துள்ளன.*

*– பிரதமர் திரு. நரேந்திர மோடி*

முடியும்?" என்ற மனநிலை ஒரு காலத்தில் பரவலாக இருந்து வந்தது.
சுதந்திரம் பெற்று 68 ஆண்டுகளுக்குப் பின்னும், நாட்டின் மக்கள் தொகையில் 68% பேர், வங்கி அமைப்புமுறைக்கு வெளியே இருந்தனர். 1969–ல் வங்கிகளின் தேசியமயமாக்கலுக்குப் பின்னும் கூட, 2014 வரை நாட்டில் 50 கோடி ஏழை மக்களிடம் அடிப்படை வங்கிக் கணக்கு கூட இல்லாத நிலைமையே நீடித்தது. சமூகத்தின் இந்த பிரிவினர் வங்கிகளை அணுக முடியவில்லை;
வங்கிக் கணக்கு வைத்திருப்பது என்பது செல்வந்தர்களுக்கு மட்டுமே உரிய ஒரு சிறப்பு உரிமையாக அவர்கள் கருதினார்கள். எனினும் 2014 ஆகஸ்ட் மாதத்திற்குப் பின், அவர்களது இல்லங்களை வங்கிச் சேவைகள் சென்றடைந்தபோது, அவர்களிடையே நம்பிக்கை, சுயமரியாதை உணர்வு தூண்டப்பட்டதுடன், அவர்கள் மனங்களில் புதிய லட்சியங்கள் வேரூன்றின. இன்று அவர்கள் தங்கள் பைகளில் இருந்து ரூபே அட்டையை பெருமிதத்துடன் எடுத்துப் பயன்படுத்துகிறார்கள். ஒரு காலத்தில் ரூபே பற்று அட்டை, செல்வந்தர்களின் குறியீடாக கருதப்பட்டது. ஆனால், ஜன் தன் வங்கிக் கணக்குகளின் வாயிலாக மத்திய அரசு அந்த மனநிலையை மாற்றியது. ஜன் தன் வங்கிக் கணக்கு என்ற விதை, ஒரு பிரம்மாண்டமான ஆலமரமாக வளர்ந்து, இது போன்ற ஏராளமான கனிகளை அது வழங்கிக் கொண்டிருக்கிறது.



**ஐந்து மடங்கு தாக்கத்தை ஏற்படுத்துவதற்கான அடித்தளத்தை அமைக்கும் ஜன் தன் திட்டம்**

இன்று ஜன் தன் வங்கிக் கணக்குத் திட்டம், 58 கோடிக்கும் அதிகமான வங்கிக் கணக்குகளை உள்ளடக்கியுள்ளது.

இந்தத் திட்டம், வங்கி சேவைக்கான உலகளாவிய அணுகலை உறுதி

12 ஆண்டுகள் ஜன் தன் திட்டம்

அட்டைப்படக் கட்டுரை

# 1 மக்களை மையப்படுத்திய வளர்ச்சியின் அடித்தளம்



1

நாட்டில் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் குறைந்தபட்சம் ஒரு அடிப்படை சேமிப்பு வங்கிக் கணக்கை வழங்குவதன் மூலம், நிதி ரீதியாக அனைவரையும் உள்ளடக்கிய இந்தியாவிற்கு அடித்தளம் அமைக்கப்பட்டது.

**89%+**

உலக வங்கியின் சர்வதேச கணக்கெடுப்பு 2025 அறிக்கையின்படி, நாட்டில் வங்கிக் கணக்குகளை வைத்திருக்கும் வயது முதிர்ந்தோரின் பங்கு 89%+ ஆக உள்ளது.

**35%**

2011–ல், 35% வயது வந்தோர், வங்கிக் கணக்குகளைப் பெற்றிருந்தனர்

2

முறையான வங்கிச் சேவையுடன் ஏழை மக்களையும் இணைக்கும் வகையில், பூஜ்ஜிய இருப்புடன் கூடிய கணக்குகளைத் தொடங்கும் வசதி.

பூஜ்ஜிய இருப்பு கொண்ட கணக்குகளின் எண்ணிக்கை இப்போது 10%க்கும் கீழ் குறைந்துள்ளது.

**10%**

3

பற்று அட்டைகள் இனி வெறும் அந்தஸ்தின் அடையாளம் மட்டுமல்ல; இணையவழி பரிவர்த்தனைகள் அதிகரித்துள்ளன




**40.89**

கோடி ரூபே பற்று அட்டைகள் கணக்குதாரர்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்பட்டுள்ளது; பொதுமக்களிடையே டிஜிட்டல் பரிவர்த்தனை பழக்கம் ஊக்குவிக்கப்படுகிறது.

4

விபத்துக் காப்பீட்டு வசதியும், மிகைப்பற்று வசதியும், கணக்குதாரர்களுக்குக் கூடுதல் நிதி பாதுகாப்பை வழங்குகின்றன.





**34.77**

லட்சம் கணக்குதாரர்கள், மிகைபற்று வசதியைப் பயன்படுத்திக் கொண்டுள்ளனர்; 10,000 ரூபாய் வரை நிபந்தனைக்குட்பட்ட மிகைப்பற்று வசதி உள்ளது.

5

வங்கிப் பிரதிநிதிகளும், வங்கிக் கட்டமைப்பின் விரிவாக்கமும், ஊரகப் பகுதிகளிலும், தொலைதூர இடங்களிலும்கூட வங்கிச் சேவை அணுகலை உறுதி செய்து, கடைசி மைல் வரை வங்கிச் சேவைகளைக் கொண்டு சென்றுள்ளன.

**13.55**

லட்சம் வங்கிப் பிரதிநிதிகள், கிளையில்லா வங்கிச் சேவைகளை வழங்குகின்றனர்.

**45.68**

கிராமப்புறம், நகர்ப்புறம் சார்ந்த பகுதிகளில் தொடங்கப்பட்ட 45.68 கோடி கணக்குகள், மொத்த எண்ணிக்கையில் சுமார் 78%-ஐ கொண்டுள்ளன.

6

### சேமிப்பு, நிதி ஒழுங்கு சார்ந்த கலாச்சாரம் வளர்ந்துள்ளது

குறைந்தபட்ச இருப்புத் தொகை வைத்திருக்க வேண்டிய கட்டாயம் ஏதுமில்லாத நிலையிலும், ஜன் தன் வங்கிக் கணக்குகளில் **₹ 3.10** லட்சம் கோடி ரூபாய் வரவு வைக்கப்பட்டுள்ளது.



> *கடைக் கோடியில் இருப்பவரும் நிதி ரீதியாக இணைக்கப்படும்போது, ஒட்டுமொத்த தேசமும் ஒன்றாக முன்னேறுகிறது. இதையேதான் பிரதமரின் ஜன் தன் வங்கிக் கணக்குத் திட்டமும் சாத்தியமாக்கியுள்ளது. இது கண்ணியத்தை மேம்படுத்தியதுடன், மக்கள் தங்கள் எதிர்காலத்தைத் தாங்களே தீர்மானித்துக் கொள்ளும் ஆற்றலையும் அவர்களுக்கு வழங்கியது.*
>
> *– பிரதமர் திரு. நரேந்திர மோடி.*

செய்வது மட்டுமின்றி, உள்ளடக்கிய வளர்ச்சிக்கான அடித்தளத்தையும் உருவாக்கியுள்ளது. நாட்டில் உள்ள அனைத்துக் குடும்பங்களும், குடிமக்களும் வங்கிக் கட்டமைப்பின் அங்கமாக மாறியிருப்பது, இந்தத் திட்டத்தின் முதல் பலனாகும். இது வெறும் வங்கிக் கணக்கு மட்டுமின்றி, சிறப்பாக கட்டமைக்கப்பட்ட ஒரு பாதுகாப்பு அரணாகவும் உருவெடுத்துள்ளது.

இரண்டாவது பலனாக, ஆற்றல் வாய்ந்த 'ஜெஏஎம் திட்டம்' (ஜன் தன் வங்கிக் கணக்கு– ஆதார்– கைப்பேசி இணைப்பு), அரசு திட்டங்களின் பலன்கள், பயனாளிகளின் வங்கிக் கணக்குகளை நேரடியாகச் சென்றடைவதை உறுதி செய்தது. இதன் மூலம் ஊழலும், முறைகேடும் கட்டுப்படுத்தப்பட்டன. இடைத்தரகர்களின் தலையீடு இன்றி, சமூகப் பொருளாதாரத் திட்டங்களின் பலன்கள், கடைக்கோடி பயனாளியையும் நேரடியாகச் சென்றடையத் தொடங்கியது. இது பொருளாதாரத்தை முறைப்படுத்தியதுடன், ரொக்கப் பரிவர்த்தனைகளையும் வங்கி அமைப்புமுறைக்குள் கொண்டு வந்தது. இன்று ஜன் தன் வங்கி கணக்கு திட்டத்தின் மூலம், திட்டப் பலன்கள் நேரடியாக வங்கிக் கணக்குகளில் செலுத்தப்படுவதுடன், நிரந்தர வீட்டு வசதிக்கான நடவடிக்கைகள், உஜ்வாலா திட்டத்தின் கீழ் இலவச சமையல் எரிவாயு சிலிண்டர்கள், முத்ரா திட்டத்தின் கீழ் உத்தரவாதம் இல்லாக் கடன்கள், பிரதமரின் ஸ்வமித்வா திட்டம், இதர சமூக நல முன்முயற்சிகள் ஆகியவை ஏழை மக்களுக்கு தன்னம்பிக்கை அளித்துள்ளன.

மூன்றாவது



12 ஆண்டுகள் ஜன் தன் திட்டம்
அட்டைப்பக்கக் கட்டுரை

## 2 நேரடிப் பணப் பரிவர்த்தனை, வெளிப்படையான நிர்வாகம்



**1**

ஜன் தன் வங்கிக் கணக்கு– ஆதார்– கைப்பேசி இணைப்பு (ஜெஏஎம் திட்டம்), அரசுத் திட்டங்களின் மானியங்களும், உதவிகளும் பயனாளிகளின் கணக்குகளுக்கு நேரடியாக சென்றடைய வழிவகை செய்தது.

**52.50+**

லட்சம் கோடி ஜன் தன் வங்கிக் கணக்கு– ஆதார்– கைப்பேசி (ஜாம் திட்டம்) கட்டமைப்பை பயன்படுத்தி, பயனாளிகளுக்கு நேரடியாகப் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**900+**

–க்கும் மேற்பட்ட திட்டங்களின் நிதியுதவிகள், நேரடிப் பணப் பரிவர்த்தனை வாயிலாக பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது

**2**

இடைத்தரகர்களின் தலையீடு இல்லாமல், ஊழல், முறைகேடுகள் குறைந்துள்ளது.

சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் பலன்கள், நேரடிப் பணப் பரிவர்த்தனையின் மூலம் அனைத்து தரப்பு மக்களுக்கும் சென்றடைகிறது.

**3**

அரசின் கருவூலம் மிச்சப்படுத்தியுள்ள கோடிக்கணக்கான ரூபாய், இப்போது உண்மையான பயனாளிகளைச் சென்றடைகிறது.

**5+** ₹

லட்சம் கோடி ரூபாய் நேரடிப் பண பரிவர்த்தனை வாயிலாக சேமிக்கப்பட்டுள்ளது. போலியான எரிவாயு இணைப்புகள், ரேஷன் அட்டைகள் நீக்கம், இரட்டைப் பயன்பாடு அல்லது முறைகேடுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

நேரடிப் பண பரிவர்த்தனை மூலம், மானிய ஒதுக்கீடு, மொத்த அரசு செலவினத்தில் 16%–லிருந்து 9%–ஆகக் குறைந்துள்ளது. இது பொது செலவினத் திறனில், குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் குறிக்கிறது.



**4**

பிரதமரின் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத் திட்ட நிதி, உஜ்வாலா திட்டம், கோவிட் நிவாரண உதவி போன்ற திட்டங்களின் உதவித்தொகை, குடிமக்களின் வங்கிக் கணக்குகளை, நேரடியாக, உரிய நேரத்தில் சென்றடைந்தன.

ரூ.4.46 லட்சம் கோடிக்கும் அதிகமான தொகை, 23 தவணைகளில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**9.44+** கோடிக்கும் அதிகமான விவசாயிகளுக்கு ஆதரவளிக்கப்பட்டுள்ளது. மொத்த பயனாளிகளில், பெண்களின் பங்கு 23%.

- பிரதமரின் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத் திட்ட நிதி முதல் தவணையாக, 2000 ரூபாய், 2020 ஏப்ரல் மாதத்தில் 8.7 கோடி விவசாயிகளுக்கு விடுவிக்கப்பட்டது.
- உஜ்வாலா திட்டத்தின் கீழ், ஏறத்தாழ 11 கோடி சமையல் எரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டதுடன், இவற்றிற்கான மானியம், வங்கிக் கணக்குகளில் நேரடியாகச் செலுத்தப்பட்டது.
- கோவிட் 19 பெருந்தொற்றின்போது, 3 கோடி விதவைகளுக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கும் தலா 1000 ரூபாய் வீதம் நிதி உதவி வழங்கப்பட்டது.

**5**

கடன் வழங்குவதன் வாயிலாக அதிக வட்டி வசூலிக்கும் உள்ளூர் நபர்களை சார்ந்திருக்கும் நிலை குறைந்துள்ளது. இது சுழற்சி முறையில் கடன் வழங்கி வரும் நடைமுறையைத் தடுக்க உதவியது.

- பிரதமரின் ஜன் தன் வங்கிக் கணக்கு திட்டம் மூலம், ஏழைகளும், விளிம்புநிலை மக்களும் வங்கிச் சேவைகளைப் பெறும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். வங்கிக் கணக்குகள் தொடங்கப்பட்டதன் மூலம், அதிகமான கடன், கடனுதவிகளைப் பெறும் வசதி கிடைத்தது.
- மார்ச் 2026-க்குள், பிரதமரின் ஸ்வநிதி திட்டத்தின் கீழ், 84 லட்சம் சாலையோர வியாபாரிகள் மொத்தம் ரூ 17,000 கோடிக்கும் அதிகமான பிணை இல்லாத கடனுதவிகளைப் பெற்றுள்ளனர்.

**6**

## பொருளாதாரத்தை முறைப்படுத்துதல்

- ரொக்கம் சார்ந்த முறைசாரா பரிவர்த்தனைகள், முறைப்படுத்தப்பட்ட வங்கிக் கட்டமைப்பிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளன.
- 'பூஜ்ய இருப்பு' வசதி கொண்ட ஜன் தன் கணக்குகள் தொடங்கப்பட்டதால், முன்பு தங்களது பணத்தை வீட்டிலேயே வைத்திருந்த தனிநபர்கள், அதனை வங்கிகளில் சேமிக்க வழி வகுத்துள்ளது.
- முன்பு வட்டிக்குக் கடன் கொடுப்பவர்கள், ரொக்கப் பரிவர்த்தனைகளைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். ஆனால், தற்போது, இணையவழிப் பரிவர்த்தனைகள் மூலம், பதிவுகளைப் பராமரிப்பது எளிதாகியுள்ளது.

**7**

நிதிசார் தரவுப் பதிவுகள், ஏழை மக்களின் கடன் தகுதி மதிப்பீடு, எதிர்காலத்தில் கடன் பெறுவதற்கான தகுதி பெறுவதில் முக்கியப் பங்காற்றுகின்றன.

- முன்பு, முறைசாராத் துறையில் பணிபுரியும் நபர்கள் அல்லது ஏழ்மை நிலையில் உள்ள நபர்களிடம் கடன் பெறுவதற்கான தகுதி மதிப்பீடு இல்லாத காரணத்தால், அவர்கள் வங்கிக் கடன்களைப் பெற இயலாத நிலை இருந்தது. ஜன் தன் திட்டம் இதற்கான வாய்ப்பை உருவாக்கியுள்ளது.
- கடன் வசதிகள் அதிகரித்ததன் மூலம், ஏழைகள், விளிம்புநிலை மக்களின் வாழ்க்கைத்தரம் மேம்பட்டுள்ளது. தற்போது, அவர்கள் கடனுதவிகள் வாயிலாக தங்களது குழந்தைகளின் கல்விக்கான செலவுகளை மேற்கொள்ள முடிகிறது.



> ***“நிதிச் சேவைகளை அனைவருக்கும் கிடைக்கச் செய்வதில், கோடிக்கணக்கான மக்களுக்கு, குறிப்பாக, பெண்கள், இளைஞர்கள், விளிம்புநிலைச் சமூகத்தினருக்கு, கண்ணியத்தை அளிப்பதில், ஜன் தன் திட்டம் மிக முக்கியப் பங்காற்றியுள்ளது”.***
>
> *– பிரதமர் திரு. நரேந்திர மோடி.*

பலனாக, சாமானிய குடிமக்களுக்குச் சமூகப் பாதுகாப்பை உறுதி செய்துள்ளதுடன், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியின் புதிய சகாப்தத்தைத் தொடங்கி வைத்துள்ளது. ஜன் தன் வங்கிக் கணக்குகள் மூலம், மக்கள் 'பிரதமரின் ஆயுள் காப்பீட்டுத் திட்டம்', 'பிரதமரின் விபத்துக் காப்பீட்டுத் திட்டம்', 'அடல் ஓய்வூதியத் திட்டம்' போன்ற சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் மூலம் பலன் பெறும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். 'பிரதமரின் ஜன் தன் வங்கிக் கணக்குத் திட்டம்' தொடங்கப்பட்டபோது, அது எவ்வாறு செயல்படும் அல்லது எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படும் என்று பலர் சிந்தித்தனர். எனினும், காலப்போக்கில், ஏழைகளுக்குப் பயனளிக்கும் பல்வேறு திட்டங்கள் இதனுடன் இணைக்கப்பட்டன. இது சமூக-பொருளாதார அதிகாரமளித்தல் நடவடிக்கைகளுக்கு அடித்தளம் அமைத்தது. இந்தத் திட்டம் தொடர்ந்து விரிவடைந்து வருகிறது. நாட்டில் சிலர் அரசு ஓய்வூதியங்களைப் பெற்று வரும் நிலையில், 35 லட்சம் பேர் முன்பு பெற்று வந்த ஏழு ரூபாய், இருபது ரூபாய், 125 ரூபாய் அல்லது 250 ரூபாய் என மிகக் குறைந்த ஓய்வூதியத் தொகைகளைச் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். மேலும், முன்பு ஓய்வூதியத்தைப்

12 ஆண்டுகள் ஜன் தன் திட்டம்

அட்டைப்பக்கக் கட்டுரை

# 3 சமூகப் பாதுகாப்பு, உள்ளடக்கிய வளர்ச்சி



1

'ஜன் தன்' வங்கிக் கணக்குகள், பிரதமரின் ஆயுள் காப்பீட்டுத் திட்டம், பிரதமரின் விபத்துக் காப்பீட்டுத் திட்டம், அடல் ஓய்வூதியத் திட்டம் போன்ற சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுடன் இணைக்கப்பட்டன.

**27.8+**

கோடிக்கும் அதிகமானோர் பிரதமரின் ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தில் இணைந்துள்ளனர்.

- ஏதாவது ஒரு காரணத்தினால் ஏற்படும் இறப்பின் போது ரூ 2 லட்சம் மதிப்பிலான ஆயுள் காப்பீட்டு பெறும் வசதி.
- ஆண்டு பிரீமியம் தொகை ரூ 436. தினசரி ரூ 1.20–க்கும் குறைவான செலவில் இந்தக் காப்பீட்டு வசதி கிடைக்கிறது.

**58.78**

கோடி பேர் பிரதமரின் விபத்துக் காப்பீட்டுத் திட்டத்தில், இணைந்துள்ளனர்.

- இறப்பு அல்லது நிரந்தரமாக முழு உடல் உறுப்பு பாதிக்கப்படும் போது ரூ 2 லட்சம், நிரந்தரப் பகுதி ஊனத்தின் போது ரூ 1 லட்சம் மதிப்பிலான, ஓராண்டு தனிநபர் விபத்துக் காப்பீடு பெறும் வசதி.
- ஆண்டு பிரீமியம் தொகை ரூ 20 (தோராயமாக ஒரு கோப்பை தேநீரின் விலை). இத்திட்டம் 18 முதல் 70 வயதுக்குட்பட்ட தனிநபர்களுக்குக் கிடைக்கிறது.

**9.29**

கோடி சந்தாதாரர்கள் அடல் ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்துள்ளனர்.

- இது மத்திய அரசின் உத்தரவாதத்துடன் கூடிய முதல் ஓய்வூதியத் திட்டமாகும். இது மாதந்தோறும் ரூ 1,000 முதல் ரூ 5,000 வரை ஓய்வூதியம் பெறுவதை உறுதி செய்கிறது.
- வயது, தேர்ந்தெடுக்கப்பட்ட ஓய்வூதியத் தொகையைப் பொறுத்து, தற்போதைய மாதாந்திர பங்களிப்புத் தொகை ரூ 42 முதல் ரூ 1,454 வரை உள்ளது.

2

முத்ரா திட்டத்தின் கீழ் உள்ள கடன் வசதிகள், சிறு தொழில்முனைவோருக்கு, குறிப்பாக, பெண்கள், கிராமப்புற மக்களுக்கு, சுயதொழில் செய்வதற்கான வாய்ப்புகளை உருவாக்கியுள்ளன.



**59+**

கோடிக்கும் அதிகமான கடன்களுக்கு பிரதமரின் முத்ரா திட்டத்தின்கீழ் அனுமதி வழங்கப்பட்டுள்ளன.

**₹ 40.76**

லட்சம் கோடி தொழில்முனைவோருக்கு கடன் வழங்கப்பட்டுள்ளன.

3

சேமிப்புப் பழக்கத்தை வளர்ப்பது, நிதி சார்ந்த ஒழுக்கத்தை ஊக்குவித்துள்ளதுடன், எதிர்காலத் திட்டமிடலுக்கான திறனை மேம்படுத்தியுள்ளது.

வங்கிக்கணக்கில் குறைந்தபட்ச இருப்புத் தொகை வைத்திருக்க வேண்டிய கட்டாயம் இல்லையென்ற போதிலும், 58.70 கோடி ஜன் தன் கணக்குகளில் ரூ 3.10 லட்சம் கோடி வைப்புத் தொகையாக உள்ளது.

4

அமைப்புசாராத் துறையைச் சேர்ந்த கோடிக்கணக்கான தொழிலாளர்களும், அவர்களது குடும்பத்தினரும், முதன்முறையாக, ஆயுள், விபத்துக் காப்பீட்டு வசதியைப் பெற்றுள்ளனர்.

**31.65+**

கோடிக்கும் அதிகமான தொழிலாளர்கள் அமைப்புசாராத் துறையைச் சேர்ந்த 'இ–ஷ்ரம்' இணையதளத்தில் பதிவு செய்துள்ளனர். இது ஒரே தளத்தின் மூலம், பல்வேறு சமூக–பொருளாதாரத் திட்டங்களின் பலன்களைப் பெற வழிவகுக்கிறது.

பிரதமரின் ஆயுள் காப்பீட்டுத் திட்டம், பிரதமரின் விபத்துக் காப்பீட்டுத் திட்டம், அடல் ஓய்வூதியத் திட்டம் போன்ற சமூகப் பாதுகாப்பு காப்பீட்டுத் திட்டங்களில் சேர்ந்து பயனடையுமாறு பிரதமரின் ஜன் தன் வங்கிக் கணக்கு வைத்திருப்பவர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். மேலும், அதற்கான பங்களிப்பைச் செலுத்துவதற்கான வாய்ப்புகளும், அவர்களுக்கு வழங்கப்படுகின்றன.



*"ஜன் தன் திட்டம் எண்ணற்ற மக்களுக்கு நிதி சேமிப்பையும், அதிகாரமளித்தலையும் உறுதி செய்து, அவர்கள் கண்ணியமான வாழ்க்கையை வாழ வழி வகுத்துள்ளது. இது வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தவும் உதவியுள்ளது."*

*– பிரதமர் திரு. நரேந்திர மோடி.*



பெறுவதற்கு வெகுதொலைவிற்குப் பயணிக்க வேண்டியிருந்த நிலை இருந்தது. ஆனால், நேரடிப் பணப் பரிமாற்ற முறை, தற்போது இந்த நடைமுறையை எளிதாக்கியுள்ளது. முதன்முறையாக, அமைப்புசாராத் துறையைச் சேர்ந்த கோடிக்கணக்கான தொழிலாளர்களும், அவர்களது குடும்பத்தினரும், ஆயுள், விபத்துக் காப்பீட்டு வசதியைப் பெற்றுள்ளனர். அதுமட்டுமின்றி, முத்ரா திட்டம் அல்லது பிற திட்டங்கள் என எதுவாக இருந்தாலும், இந்த வங்கிக் கணக்கு, சுயதொழில் செய்வதற்கான புதிய வழிகளை உருவாக்கியுள்ளது. நான்காவது பலனாக, நாட்டின் பெண்களுக்கு, உண்மையான அதிகாரம் கிடைத்துள்ளது. இது அவர்களுக்கு முதன்முறையாகச் சமூக–பொருளாதார ரீதியான கண்ணியத்தை வழங்கியுள்ளது. தற்போது, ஜன் தன் கணக்கு வைத்திருப்பவர்களில், 56 சதவீதத்திற்கும் அதிகமானோர் பெண்கள் ஆவர். தங்களது பெயரில் வங்கிக் கணக்குகள் இருப்பது, பெண்களுக்குத் தற்சார்பு நிலையை அடைவதற்கான வாய்ப்புகளையும், குடும்பத்தின் நிதி சார்ந்த முடிவெடுப்பதில் பங்கேற்கும் வாய்ப்பையும் அளித்துள்ளது. சேமிக்கும் மனப்பான்மையும், பழக்கமும் முறையான

# 4 பெண்களுக்கு அதிகாரமளித்தல், சமூக கண்ணியம்



1

'ஜன் தன்' கணக்குகளில், 56% பெண்களின் பங்களிப்பாக உள்ளது. இது பெண்களின் பொருளாதார அதிகாரமளித்தல் நடவடிக்கைகளில் ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

2

தங்களது பெயரில் வங்கிக் கணக்கு வைத்திருப்பது, பெண்களுக்கு தற்சார்பு, குடும்பத்தின் நிதி சார்ந்த முடிவுகளில் பங்கேற்கும் வாய்ப்பை வழங்கியுள்ளது.

**32.72**

கோடி 'ஜன் தன்' கணக்குகள் பெண்களுக்காக தொடங்கப்பட்டுள்ளன. இது தங்களது சேமிப்பை வங்கியில் பாதுகாப்பாக வைத்திருக்க அவர்களுக்கு உதவுகிறது.

'பிரதமரின் கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகளில்,

**75%**

வீடுகள் பெண்களுக்கு அல்லது இணை உரிமையின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மேலும், பல்வேறு திட்டங்களில், பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, நிதியுதவி அல்லது மானியத் தொகைகள் நேரடியாக அவர்களின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படுவது உறுதி செய்யப்படுகிறது.

3

நேரடிப் பணப் பரிமாற்றத் திட்டங்கள், பெண்கள் தங்களது வங்கிக் கணக்குகளில் நேரடியாக நிதி உதவியைப் பெற வழி வகுத்துள்ளன. இதன் மூலம், அவர்களின் கண்ணியம் மேம்பட்டுள்ளது.



பெண் பயனாளிகள்: 'பிரதமரின் முத்ரா கடன் திட்டத்தின் கீழ் **68%**

'பிரதமரின் ஸ்வநிதி திட்டத்தின் கீழ் **44%**

கிராமப்புறக் குடும்பங்களைச் சேர்ந்த **10+** கோடிக்கும் அதிகமான பெண்கள் சுயஉதவிக் குழுக்களுடன் இணைந்து செயல்படுவதுடன், மத்திய அரசின் ஆதரவையும் பெறுகின்றனர்.

'செல்வமகள் சேமிப்புத் திட்டத்தின் கணக்குகளிலும் நிதி வரவு வைக்கப்படுகிறது.



4

**கொவிட்–19 பெருந்தொற்றுக் காலத்தில், வங்கிக் கணக்கு வைத்திருக்கும் பெண்களுக்கு உடனடி நிதியுதவியை நேரடியாக வழங்கும் நடைமுறை சாத்தியமாகியுள்ளது.**

கொவிட்–19 காலத்தில், பிரதமரின் ஜன் தன் திட்டத்தின் கீழ், வங்கிக் கணக்கு உள்ள 20.40 கோடி பெண்களுக்கு, தலா ரூ 500 வீதம், மூன்று தவணைகளில் மொத்தம்

**₹ 30,600**

கோடி நிதியுதவி வழங்கப்பட்டது.

**14.17+**

கோடிக்கும் அதிகமான சமையல் எரிவாயு சிலிண்டர்கள் கோவிட்–19 காலத்தில், பிரதமரின் உஜ்வாலா திட்டத்தின் மூலம், 8 கோடி பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இந்த சிலிண்டர்களுக்கான மானியத் தொகையாக ரூ 9,670 கோடி பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக செலுத்தப்பட்டது.

5

வெள்ளம், வறட்சி போன்ற பிற பேரிடர் காலங்களிலும், அவசர பணப் பரிவர்த்தனைகளை மேற்கொள்வதற்கான ஒரு சிறந்த வழிமுறையாக இது அமைந்துள்ளது.



*“ஜன் தன் திட்டம், மக்களுக்கு அதிகாரமளித்தலுக்கான பயணத்தில், ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையாகும். இத்திட்டத்தின் மூலம், லட்சக்கணக்கான மக்கள் நிதிச் சேவைகளின் மைய நீரோட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம் வளர்ந்து வரும் பொருளாதாரத்தில், ஒவ்வொரு இந்தியருக்கும் உரிய இடத்தையும் உறுதி செய்துள்ளோம்.”*

*– பிரதமர் திரு. நரேந்திர மோடி..*

வங்கிச்சேவையின் பயன்களைப் பெற்றுள்ளன. வங்கிகள் வாயிலான சேமிப்பு, மக்களிடையே ஒரு தனித்துவப் பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்தியுள்ளது. மேலும், கொவிட்–19 பெருந்தொற்றுக் காலத்தில், ஜன் தன் வங்கிக் கணக்கு மூலம், மத்திய அரசு பெண்களின் கணக்குகளுக்கு நிதியுதவியை நேரடியாக வழங்க வகை செய்துள்ளது. இத்தகைய வங்கிக் கணக்குகள் இல்லாத நிலை இருந்திருந்தால், பெருந்தொற்றுக் காலத்தில், உதவிகளை வழங்குவது மிகவும் கடினமான பணியாக இருந்திருக்கும் என்பதை எளிதில் ஊகிக்க முடியும். சுருங்கக் கூறினால், பேரிடர் அல்லது நெருக்கடி ஏற்படும் காலங்களில், உதவிகளை வழங்குவதற்கான ஒரு முக்கிய வழிமுறையாக ஜன் தன் வங்கிக் கணக்குகள் அமைந்துள்ளன.

ஐந்தாவது, குறிப்பிடத்தக்க பலனாக, மிகத் தொலைதூரக் கிராமங்களில் வசிக்கும் மக்களும், தொழில்நுட்ப ரீதியாக, அதிகாரமடைந்துள்ளனர். இந்த வங்கிக் கணக்குகள் டிஜிட்டல், யுபிஐ பணப் பரிவர்த்தனைகளில், ஒரு புரட்சியை ஏற்படுத்தியுள்ளன. ரூபே அட்டைகள், மொபைல் வங்கிச் சேவைகள் கிராமப்புறங்களிலும் டிஜிட்டல் கல்வியறிவை மேம்படுத்தியுள்ளன. இந்தியாவின் யுபிஐ செயலி தற்போது உலகளவில், அங்கீகாரம் பெற்ற பணப் பரிவர்த்தனைக்கான தளமாக உருவெடுத்துள்ளது. ஜன் தன் திட்டம் இத்தகைய பன்முகத் தாக்கங்களை ஏற்படுத்துவதில், ஒரு முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கையாகத் திகழ்கிறது.

இதன் விளைவாக, வங்கிக்



12 ஆண்டுகள் ஜன் தன் திட்டம்
அட்டைப்பக்கக் கட்டுரை

# 5 டிஜிட்டல் இந்தியா, தொழில்நுட்ப அதிகாரமளித்தல்



1

ஜன் தன் வங்கிக் கணக்குகள், யுபிஐ உள்ளிட்ட டிஜிட்டல் பணப் பரிவர்த்தனைகளுக்கான புரட்சிக்கு வித்திட்டுள்ளன. இதன் மூலம், தற்போது, உலகளவில், அதிக எண்ணிக்கையிலான டிஜிட்டல் பரிவர்த்தனைகளை மேற்கொள்ளும் நாடாக இந்தியா திகழ்கிறது.




**55.49**
கோடி யுபிஐ பயனர்கள்.

**₹ 314+**
லட்சம் கோடி 2025–26-ம் ஆண்டில், யுபிஐ செயலி வாயிலாக மேற்கொள்ளப்பட்டப் பணப் பரிவர்த்தனைகளின் மதிப்பு.

பூடான், சிங்கப்பூர், ஐக்கிய அரபு அமீரகம், பிரான்ஸ், மொரிஷியஸ், இலங்கை, நேபாளம், கத்தார், கிரீஸ், கம்போடியா ஆகிய **10** நாடுகள் யுபிஐ செயலியைப் பயன்படுத்துகின்றன.

2

ரூபே அட்டைகள், மொபைல் வங்கிச் சேவைகள், கிராமப்புறங்கள், தொலைதூரப் பகுதிகளிலும், டிஜிட்டல் கல்வியறிவை பரவச் செய்துள்ளன.

RuPay

ஜன் தன் வங்கிக் கணக்கு வைத்திருப்போருக்கு
**40.89**
கோடி ரூபே பற்று அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

பிரதமரின் கிராமப்புற டிஜிட்டல் கல்வியறிவுத் திட்டத்தின் கீழ்,
**6.39**
கோடி மக்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.



3

'ஜன் தன் தர்ஷக்' செயலி வாயிலாக, வங்கிச் சேவை மையங்கள் 5 கி.மீ, சுற்றளவுக்குள் உள்ள பகுதிகளை உள்ளடக்கியுள்ளன.

**21.6+**
லட்சத்திற்கும் அதிகமான வங்கிச் சேவை மையங்கள் நாடு முழுவதும் உள்ளன.

**6+**
லட்சத்திற்கும் அதிகமான (அதாவது 99.92%) கிராமங்கள், 5 கி.மீ சுற்றளவுக்குள் வங்கிச் சேவை வசதிகளைப் (வங்கி கிளை, இந்தியா போஸ்ட் பேமெண்ட்ஸ் வங்கி அல்லது வங்கி மித்ரா) பெற்றுள்ளன.



## தேசிய, சர்வதேச அளவிலான அங்கீகாரம்

1

இந்தத் திட்டம், உலக வங்கி, கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தால் உலகின் மிகப்பெரிய நிதிச் சேர்க்கை முயற்சியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**1,80,96,130**

வங்கிக் கணக்குகள் ஜன் தன் திட்டத்தின் கீழ், ஒரே வாரத்தில் (ஆகஸ்ட் 23–29, 2014) தொடங்கப்பட்டன. இந்தச் சாதனை கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்திலும் இடம் பெற்றுள்ளது.


GUINNESS WORLD RECORDS

CERTIFICATE

The most bank accounts opened in 1 week as a part of financial inclusion campaign is 18,096,130 and was achieved by Department of Financial Services, Government of India (India) from 23 to 29 August 2014

OFFICIALLY AMAZING

2

இத்திட்டம், இதர வளரும் நாடுகளுக்கு, நிதிச் சேர்க்கைக்கான முன் மாதிரியாகத் திகழ்கிறது.



*"பிரதமரின் ஜன் தன் திட்டம் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. இது வறுமை ஒழிப்புக்கான பல்வேறு திட்டங்களுக்கு அடித்தளமாக அமைந்து, கோடிக்கணக்கான மக்களுக்குப் பயனளித்துள்ளது. இத்திட்டம் பல்வேறு குடும்பங்களின் எதிர்காலத்தைப் பாதுகாத்துள்ளது. இத்திட்டத்தின் பயனாளிகளில் பெரும்பாலானோர் பெண்களும், கிராமப்புறங்களில் வசிப்பவர்களும் ஆவர்."*

*– பிரதமர் திரு. நரேந்திர மோடி.*

கணக்குகள், நிதிச் சேவைகளுக்கான வசதிகளை விரிவுபடுத்தியதற்காக, சர்வதேச செலாவணி நிதியம், பிற சர்வதேச அளவிலான அமைப்புகள் இத்திட்டத்திற்குப் பாராட்டு தெரிவித்துள்ளன.

இத்திட்டம் கின்னஸ் உலக சாதனை அமைப்பிடமிருந்தும் சிறப்பு அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. உலகின் மிகப்பெரிய நிதிச் சேர்க்கை முயற்சியின் முக்கிய அங்கமாகத் திகழும் 'ஜன் தன் திட்டம்", தற்போது பல்வேறு வளரும் நாடுகளுக்கு ஒரு முன்மாதிரியாக விளங்குகிறது.

### வாழ்வாதாரமாக மாறிய மக்கள் இயக்கம்

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமையிலான, இந்த 12 ஆண்டு காலப் பயணத்தில், 'ஜன் தன் திட்டம்' வெறும் நிதித் திட்டத்தைக் கடந்து, சமூக நீதி, வெளிப்படையான நிர்வாகம், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியின் அடையாளமாக உருவெடுத்துள்ளது. வங்கிச் சேவைகளிலிருந்து பெருமளவில் விலக்கி வைக்கப்பட்டிருந்த நிலையிலிருந்து, முழுமையான வங்கிச் சேவை பெறும் நாடாக இந்தியாவை மாற்றியமைத்த இந்தப் பயணம், கோடிக்கணக்கான குடிமக்களுக்கு கண்ணியம், பாதுகாப்பு, தற்சார்பு நிலையை எட்டுவதற்கு வழி வகுத்துள்ளது. சந்தேகத்திற்கு இடமின்றி, 'ஜன் தன் திட்டத்தின் வெற்றி, பன்முகத் தாக்கத்தால் உந்தப்பட்டு, நல்லாட்சியிலிருந்து, தற்சார்பு நிலையை நோக்கிய இந்தப் பயணம், 'புதிய இந்தியா'வின் கொள்கை முழக்கமாக உருவெடுத்து 'வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான' இலக்குகளை எட்டுவதற்கு வழி வகுக்கிறது.



ஜிந்த் நகரிலிருந்து ரூ 14,700 கோடி மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்கள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

# ரயில் போக்குவரத்தின் எதிர்காலம் ஹைட்ரஜன் ரயில்

**சுற்றுச்சூழலுக்கு உகந்த போக்குவரத்து வசதிகளை உருவாக்குவதில், இந்தியா குறிப்பிடத்தக்க வகையில் முன்னேற்றம் கண்டுள்ளது. 1,155 கி.மீ நீளமுள்ள உலகின் மூன்றாவது மிகப்பெரிய மெட்ரோ ரயில் கட்டமைப்பு, 23,000 மின்சாரப் பேருந்துகளை இயக்குவதற்கான ஒப்புதல் அல்லது விரிவடைந்து வரும் பசுமை விரைவுச்சாலைகள் என, பசுமை உள்கட்டமைப்பு வசதிகள் பெருமளவில் வலுப்படுத்தப்பட்டு வருகிறது. இந்த முயற்சியின் ஒரு பகுதியாக, ஜூலை 17 அன்று ஹரியானா மாநிலத்தில் ஜிந்த் – சோனிபட் இடையே, உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட இந்தியாவின் முதல் ஹைட்ரஜன் ரயிலை பிரதமர் திரு நரேந்திர மோடி கொடியசைத்துத் தொடங்கி வைத்தார். இது ரயில் சேவையாகவும், தற்சார்பு இந்தியாவிற்கான பசுமை எரிசக்தி, நவீன ரயில்வே கட்டமைப்புகள் ஆகியவற்றின் புதிய அடையாளமாகவும் திகழ்கிறது...**

ரயில் அல்லது சாலை என எதுவாக இருந்தாலும், போக்குவரத்துக்கான இணைப்புத் திட்டங்கள், பயணிகளுக்கு வசதிகளை அளிப்பதுடன், வளர்ச்சியின் வேகத்தையும் பலமடங்கு அதிகரிக்கின்றன. இதனைக் கருத்தில் கொண்டு மத்திய அரசு போக்குவரத்து, சாலை வசதிகளை மேம்படுத்துவதில் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது. ஹரியானா மாநிலம் ஜிந்த் நகரில், நாட்டின் முதல் ஹைட்ரஜன் ரயில் சேவையை பிரதமர் நரேந்திர மோடி கொடியசைத்துத் தொடங்கி வைத்து, பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டி உரையாற்றிய போது, இந்த ஹைட்ரஜன் ரயில் மற்ற ரயில்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டது என்று குறிப்பிட்டார். இதற்குத் தனி அமைப்பும், பிரத்யேக உள்கட்டமைப்பு வசதிகளும் தேவைப்படுகின்றன. ஜிந்த் நகரில் இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. மேலும், எதிர்காலத்தில் ஹைட்ரஜன் ரயில்களை வடிவமைப்பதற்கான கூடுதல் உள்கட்டமைப்பு வசதிகளும் இங்கு உருவாக்கப்படும். ஹைட்ரஜன் ரயில் கட்டமைப்பின் தேவைகளைப் பூர்த்தி செய்ய புதிய தொழிற்சாலைகள் அமைக்கப்படும். இத்திட்டத்தின் மூலம், ஹரியானா மாநிலத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்குப் பல்வேறு புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

*"இந்தியாவின் ஹைட்ரஜன் ரயில் புகையில்லாத போக்குவரத்துக்கான வாகனமாகவும், 'மேக் இன் இந்தியா' (இந்தியாவில் உற்பத்தி செய்வோம்) திட்டத்திற்கு ஒரு சிறந்த உதாரணமாகவும் திகழ்கிறது. இந்த ஹைட்ரஜன் ரயில், இந்தியப் பொறியியல் வல்லுநர்களால் வடிவமைக்கப்பட்டு, இந்திய நிறுவனத்தால் உருவாக்கப்பட்டுள்ளது."*

*– பிரதமர் திரு. நரேந்திர மோடி.*

**மிகவும் சக்திவாய்ந்த ஹைட்ரஜன் ரயில்**

# 3,200

**குதிரைத்திறன்**

**உலகின் மிக நீளமான, சக்திவாய்ந்த ஹைட்ரஜன் ரயில்**

- ஹைட்ரஜன் ரயில்கள் சுமார் 7 முதல் 8 ஆண்டுகளுக்கு முன்புதான் உலக அளவில் அறிமுகமாயின. தற்போது, உலகில் 3 அல்லது 4 நாடுகள் மட்டுமே ஹைட்ரஜன் ரயில்களை இயக்கும் திறனைக் கொண்டுள்ளன.



**21-ம் நூற்றாண்டுக்கான ரயில் போக்குவரத்தை வரையறுத்தல்**
19-ம் நூற்றாண்டு ரயில்வேயை நீராவி இயந்திரங்கள் வரையறுத்தன. 20-ம் நூற்றாண்டை டீசல் ரயில்களும் மின்சார ரயில்களும் வரையறுத்தன. இப்போது, 21-ம் நூற்றாண்டு ரயில்வேயை ஹைட்ரஜன் ஆற்றலால் இயங்கும் ரயில்கள் வரையறுக்கின்றன.

---

**ரயில் கட்டமைப்பு மின்மயமாக்கல்**
1925-ம் ஆண்டு முதல் 2014-ம் ஆண்டு வரையிலான கிட்டத்தட்ட 90 ஆண்டு காலக்கட்டத்தில், நாட்டின் ரயில்வே கட்டமைப்பில் 30% மட்டுமே மின்மயமாக்கப்பட்டிருந்தது. ஆனால், கடந்த 12 ஆண்டுகளில், இந்தியாவின் ரயில்வே கட்டமைப்பில் ஏறத்தாழ 99% மின்மயமாக்கப்பட்டுள்ளது.

---

**ஜிந்த், ஐந்து தேசிய நெடுஞ்சாலைகளுடன் இணைக்கப்பட்டுள்ளது**
ஜிந்த் தற்போது ஐந்து தேசிய நெடுஞ்சாலைகளுடன் இணைக்கப்பட்ட ஒரு மாவட்டமாக மாறியுள்ளது. இத்தகைய இணைப்பு, உள்ளூர் விவசாயிகள், கால்நடை வளர்ப்போர் உள்ளிட்டோர் தங்களது உற்பத்திப் பொருட்களை முக்கிய சந்தைகளுக்குக் கொண்டு செல்வதை எளிதாக்கி செலவைக் குறைக்கும். இது தொழில்துறையையும் சுற்றுலாவையும் மேம்படுத்தி, அதன் மூலம் ஏராளமான புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும்.

## பிரதமர் நரேந்திர மோடி ஹரியானாவுக்கு வளர்ச்சித் திட்டங்களைப் பரிசளித்தார்

- ஜிந்த் – சோனிபட் இடையே இயங்கும் நாட்டின் முதல் ஹைட்ரஜன் எரிபொருள் ரயிலை கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.
- ஹரியானாவில் 12,470 கோடி ரூபாய்க்கும் அதிகமான மதிப்பிலான தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.
- சுமார் 9,680 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்ட 157.92 கிலோ மீட்டர் நீளமுள்ள, நான்கு வழிச்சாலையான, முழுமையாக அணுகக்கூடிய தில்லி–அமிர்தசரஸ்–கத்ரா விரைவுச்சாலை, நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.
- 33.81 கிலோ மீட்டர் நீளமுள்ள, நான்கு வழிச்சாலையான, பகுதி அணுகல் கட்டுப்பாட்டுடன் கூடிய அம்பாலா–காலா அம்ப் நெடுஞ்சாலை (தேசிய நெடுஞ்சாலை –7, தேசிய நெடுஞ்சாலை–344 ஆகியவற்றில் அமைந்துள்ளது) திறந்து வைக்கப்பட்டது.
- 40.60 கிலோ மீட்டர் நீளமுள்ள ஜிந்த்–கோஹானா பசுமைவழி நெடுஞ்சாலை (தேசிய நெடுஞ்சாலை–352ஏ–வில்) திறந்து வைக்கப்பட்டது.
- குருக்ஷேத்திரத்தில் ஹன்சி–பர்வாலா தரிசு நில நெடுஞ்சாலைத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டியதுடன், உயர்மட்ட ரயில் பாதையைத் திறந்து வைத்தார்.
- பண்டிட் நேகி ராம் சர்மா அரசு மருத்துவக் கல்லூரி (பிவானி), மகரிஷி சியவன் மருத்துவக் கல்லூரி, ராவ் துலா ராம் மருத்துவமனை (கொரியாவாஸ், நர்னால்) உள்ளிட்ட முக்கிய மருத்துவ நிறுவனங்கள் தேசத்திற்கு அர்ப்பணிக்கப்பட்டன.
- குருக்ஷேத்திரத்தில் சீக்கிய அருங்காட்சியகத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டு, அப்பகுதியின் கலாச்சார உள்கட்டமைப்பு

இந்த ரயில் திட்டம் ஹரியானா இளைஞர்களுக்குப் பல புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கும். மும்பைக்கும் தானேவுக்கும் இடையேயான வரலாற்றுச் சிறப்புமிக்க முதல் ரயில் பயணத்தை ஹைட்ரஜன் ரயிலுடன் ஒப்பிட்டுப் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, ஜிந்த் பகுதியானது, இந்த ஹைட்ரஜன் ரயிலின் இயக்கத்தின் மூலமாக, எதிர்கால சந்ததியினருக்கான மேம்பட்ட பசுமைப் போக்குவரத்தின் அடையாளச் சின்னமாக வரலாற்றின் பக்கங்களில் பொறிக்கப்படும் என்று கூறினார். பல்வேறு நெடுஞ்சாலைகளால் இணைக்கப்பட்டு வரும் ஜிந்த் பகுதியில், இப்போது மூன்று முக்கியத் திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. தில்லி–அமிர்தசரஸ்–கத்ரா விரைவுச்சாலையின் ஹரியானா பகுதி திறந்து வைக்கப்பட்டுள்ளது. ஜிந்த்–கோஹானா தேசிய நெடுஞ்சாலை நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. மேலும், அம்பாலா–காலா அம்ப் நான்கு வழிச் சாலையானது ஹரியானா, இமாச்சலப் பிரதேச மாநிலங்களின் மக்களுக்குப் பெரிய வசதியை அளிக்கும்.




## தொழில்நுட்பம், புத்தாக்கம், சுகாதாரம்:

# வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான வலுவான அடித்தளம்

**சண்டிகர் வெறும் நகரம் மட்டுமல்ல, அது இந்தியாவின் வளர்ச்சிக்கு ஒரு முன்மாதிரி. இந்த வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும் முயற்சியைத் தொடரும் வகையில், பிரதமர் திரு. நரேந்திர மோடி, சுகாதாரம், கல்வி, சாலை உள்கட்டமைப்பு போன்ற துறைகளை உள்ளடக்கிய, 4,700 கோடி ரூபாய்க்கும் அதிகமான மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு 2026 ஜூலை 17 அன்று சண்டிகரில் அடிக்கல் நாட்டி, நிறைவடைந்த திட்டங்களை நாட்டுக்கு அர்ப்பணித்தார். மேலும், வளர்ச்சி முன்முயற்சிகளை பஞ்சாபில் உள்ள ஜலந்தருக்கும் அவர் விரிவுபடுத்தினார்...**

சண்டிகர், கல்வி, பொறியியல், மருத்துவ அறிவியல், ஆராய்ச்சி தொடர்பான முக்கிய நிறுவனங்கள் ஒருங்கே அமைந்துள்ள ஒரு நகரமாகும். இத்தகைய ஆற்றலைக் கொண்ட நகரங்கள் மிகச் சிலவே. எதிர்காலத்தில், இந்த நிறுவனங்கள் புதிய தொழில்நுட்பம், சுகாதாரம், புத்தொழில் நிறுவனங்கள், புத்தாக்கம் ஆகியவற்றுக்கான முக்கிய மையங்களாக உருவெடுக்கக்கூடும். சண்டிகரில் நடைபெற்ற பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின் தொடக்க விழாவில் பேசிய பிரதமர் திரு. நரேந்திர மோடி, வளர்ச்சியடைந்த இந்தியாவை நோக்கிய பயணத்திற்கு, நவீன சிந்தனையுடன் எதிர்காலத் தொழில்நுட்பங்கள், போக்குவரத்து, சுகாதார சேவைகள் ஆகியவற்றை மேம்படுத்துவது அவசியம் என்று குறிப்பிட்டார். தற்போதைய தலைமுறைக்கு மட்டுமல்லாமல், எதிர்காலத் தலைமுறையினருக்கும் பயனளிக்கும் வகையில் முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். காலப்போக்கில் மேலும் வலுப்பெறும் நிறுவனங்களை நாம்

*"நோய்களுக்கான சிகிச்சையுடன், இப்போது நோய்த்தடுப்பு சுகாதாரத்திலும் சமமான கவனம் செலுத்தப்படுகிறது. ஊட்டச்சத்து இயக்கம் (போஷன் அபியான்), இந்திரதனுஷ் தடுப்பூசி இயக்கம், யோகா, எச்பிவி தடுப்பூசி, யூ-வின் தளம் போன்ற பல முக்கிய முன்முயற்சிகள் மூலம் பல லட்சக் கணக்கான மக்களின் உயிர்கள் காப்பாற்றப்பட்டு வருகின்றன."*

*– பிரதமர் திரு. நரேந்திர மோடி.*

## ஒவ்வொரு நாளும் வெற்றியின் புதிய சிகரங்கள் எட்டப்படுகின்றன

- 2014-ம் ஆண்டு முதல் நாட்டில் 15 புதிய எய்ம்ஸ் மருத்துவமனைகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
- இப்போது, நாட்டில் ஏறத்தாழ 1.75 லட்சம் ஆயுஷ்மான் ஆரோக்கிய மையங்கள் செயல்பட்டு வருகின்றன.
- நாட்டில் 90 சதவீதத்திற்கும் அதிகமான பிரசவங்கள் மருத்துவமனைகளில் நடைபெறுகின்றன.



பிரசவத்தின்போது தாய்மார்கள் இறப்பு விகிதம் **86%** குறைந்துள்ளது

- நாட்டில் 48 கோடிக்கும் அதிகமான தொலை மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.
- நாட்டில் காசநோய் சிகிச்சை 90 சதவீதத்தைத் தாண்டியுள்ளது.
- உலக சுகாதார அமைப்பின் அறிக்கை ஒன்றின்படி, நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் காசநோய் தொற்றுகள் 21 சதவீதம் குறைந்துள்ளன.

## சண்டிகர், வளர்ச்சிக்கான பரிசுகளைப் பெறுகிறது

- சுகாதாரம், கல்வி, சாலை உள்கட்டமைப்பு தொடர்பான 4,700 கோடி ரூபாய்க்கும் அதிக மதிப்பிலான பல்வேறு திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டு, நிறைவடைந்த திட்டங்கள் தொடங்கி வைக்கப்பட்டன.
- சண்டிகரில் உள்ள பிஜிஐஎம்இஆர்-ல் மேம்பட்ட தாய் சேய் நல மையம், மேம்பட்ட நரம்பியல் மையம் ஆகியவற்றின் தொடக்க விழா நடைபெற்றது.
- பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் சுகாதார உள்கட்டமைப்புத் திட்டத்தின் கீழ், 150 படுக்கைகள் கொண்ட அதிநவீன தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.
- சண்டிகரில் உள்ள கல்வி நிறுவனங்கள் தொடர்பான பல்வேறு உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கான தொடக்க விழாவும் அடிக்கல் நாட்டு விழாவும் நடைபெற்றது.
- அம்பாலா – சண்டிகர் பசுமைவழி நெடுஞ்சாலையின் (தேசிய நெடுஞ்சாலை -205ஏ) பிஆர்-7 கிளைச் சாலைக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

## ஜலந்தருக்கு வளர்ச்சிப் பரிசுகள்

**₹5,470 கோடி ரூபாய்** மதிப்பிலான ரயில், சாலை உள்கட்டமைப்பு திட்டங்களுக்கான தொடக்க விழாவும், அடிக்கல் நாட்டு விழாவும் நடைபெற்றது.

- அம்ரித் பாரத் ரயில் நிலையத் திட்டத்தின் கீழ், ஜலந்தர் கண்டோன்மென்ட் உட்பட நாடு முழுவதும் 75 மறுசீரமைக்கப்பட்ட ரயில் நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டன.
- கார்டோலி – அம்பாலா ரயில் சேவை, அமிர்தசரஸ் (செஹார்தா) – வாரணாசி ரயில் சேவை ஆகியவை கொடியசைத்துத் தொடங்கி வைக்கப்பட்டன.
- நங்கல் அணை – தல்வாரா – முகேரியன் புதிய ரயில் பாதைத் திட்டத்தின் கீழ் சுமார் 830 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட தௌலத்பூர் சௌக் – கர்த்தோலி புதிய ரயில் பாதையின் தொடக்க விழா நடைபெற்றது.
- பஞ்சாபில் சாலை உள்கட்டமைப்பை வலுப்படுத்தும் வகையில், 3,070 கோடி ரூபாய்க்கும் அதிக மதிப்பிலான தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டு, அவை திறந்து வைக்கப்பட்டன.
- 30.9 கிலோ மீட்டர் நீளமுள்ள புதிய, தில்லி – அமிர்தசரஸ் – கத்ரா நான்கு வழி விரைவுச்சாலையின் பிரிவு-6-ன் திறப்பு விழா நடைபெற்றது.
- 25.2 கிலோ மீட்டர் நீளமுள்ள, ஆறு வழித்தடங்கள் கொண்ட புதிய தெற்கு லூதியானா புறவழிச்சாலையின் மேம்பாட்டுப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.



நங்கள் அணை – தல்வாரா – முகேரியன் பதிய பாதை திட்டத்தின் கீழ், சுமார் **₹830 கோடி ரூபாய்** செலவில் அமைக்கப்பட்ட தௌலத்பூர் சௌக் – கார்டோலி புதிய ரயில் பாதையின் துவக்க விழா.

கட்டியெழுப்ப வேண்டும்.

கடந்த சில ஆண்டுகளில், சண்டிகரில் நவீன தொழில்நுட்பத்தை ஒருங்கிணைப்பதற்காக, நவீன போக்குவரத்து அமைப்புகள், நவீன வாகன நிறுத்துமிட வசதிகள், டிஜிட்டல் ஆளுகை போன்ற பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இந்தத் திட்டப்பணிகளுக்காக 2,500 கோடி ரூபாய்க்கும் மேல் செலவிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, சுகாதாரம், கல்வி, உள்கட்டமைப்பு தொடர்பான புதிய வளர்ச்சிப் பணிகள் இன்றும் இங்கு தொடங்கப்படுவதாகக் குறிப்பிட்டார். ●

# வளர்ச்சியடைந்த கிராமங்கள்

## வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான வலுவான அடித்தளம்

**வளர்ச்சியடைந்த கிராமங்கள், வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான அடித்தளமாகும். வளர்ச்சியடைந்த இந்தியாவைக் கட்டியெழுப்பும் பயணம் ஒரு முக்கியமான கட்டத்தைக் கடந்து கொண்டிருக்கிறது. அதில் இளைஞர்கள் முக்கியப் பங்கை ஆற்றி வருகின்றனர். பிரதமர் திரு. நரேந்திர மோடி, 2026 ஜூலை 26 அன்று துடிப்பான கிராமங்கள் திட்டத்தில் பங்கேற்ற இளைஞர்களுடன் கலந்துரையாடினார். நாட்டின் இளைஞர்கள் அடித்தட்டு மக்களுடன் இணையும்போது, அவர்கள் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற தொலைநோக்குப் பார்வையை மேலும் விரிவுபடுத்துகிறார்கள் என்று பிரதமர் குறிப்பிட்டார்.**

'மேரா யுவ பாரத்' (மை பாரத்) தளம் சில ஆண்டுகளுக்கு முன்பு நிறுவப்பட்டது. நாடு முழுவதிலும் இருந்து லட்சக்கணக்கான இளைஞர்கள் இதில் இணைந்துள்ளனர். இப்போது, 'மை பாரத்' தன்னார்வலர்கள் நாடு தழுவிய அளவில் பாராட்டத்தக்க பணிகளைச் செய்து வருகின்றனர். 'வளர்ச்சியடைந்த இந்தியா உரையாடல்' முதல் 'துடிப்பான கிராமங்கள் திட்டம்' வரை, இளைஞர்கள் தங்கள் ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளனர். துடிப்பான கிராமங்கள் திட்டத்தில் பங்கேற்றவர்களுடன் கலந்துரையாடிய பிரதமர் திரு. நரேந்திர மோடி, இந்தியாவின் இளைஞர்கள் எல்லைக் கிராமங்களைப் பற்றி எவ்வளவு அதிகமாக அறிந்து கொள்கிறார்களோ, அவ்வளவு எளிதாக அவர்கள் இந்தியாவைப் புரிந்துகொள்வார்கள் என்று கூறினார். இதன் மூலம் அவர்கள் நாட்டின் ஒவ்வொரு பகுதியுடனும் சிரமமின்றி இணைவார்கள் எனவும் இந்த முயற்சி அவர்களுக்குப் புதிய வலிமையைக் கொடுக்கும் என்றும் பிரதமர் கூறினார்.

> *“இன்றைய இளைஞர்களே வளர்ச்சியடைந்த இந்தியாவின் ஆற்றலாகவும், அதன் மிகப்பெரிய பயனாளிகளாகவும் திகழ்கின்றனர். எனவே, இளைஞர் சக்தியானது நாட்டின் சவால்களுடனும் தீர்வுகளுடனும் நேரடியாக இணையும்போது, எதிர்காலம் நிச்சயம் பிரகாசமாக இருக்கும்.”*
>
> *– பிரதமர் திரு. நரேந்திர மோடி*







### பங்கேற்பாளர்களுடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி காணொலிக் காட்சி மூலம் கலந்துரையாடல்

நாடு முழுவதும் உள்ள 245 மாவட்டங்களைச் சேர்ந்த **5,000**-க்கும் அதிகமான 'மை பாரத்' தன்னார்வலர்கள் இந்த நிகழ்வில் காணொலிக் காட்சி வாயிலாகப் பங்கேற்றனர்.

'மை பாரத்' முன்முயற்சிகள் மூலம் **2.30 கோடிக்கும் அதிகமான** இளைஞர்கள் பயனடைந்துள்ள நிலையில், நாடு தழுவிய வினாடி வினாவில் 2.86 லட்சம் இளைஞர்கள் பங்கேற்றனர்.

**403** எல்லைக் கிராமங்களைப் பார்வையிட தன்னார்வலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## நாட்டின் முதல் கிராமங்கள்: இந்தியாவின் எல்லைக் கிராமங்கள்

மை பாரத் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படும் 'வளர்ச்சியடைந்த துடிப்பான கிராமங்கள் திட்டம்', இந்தியாவின் எல்லைக் கிராமங்களை நாட்டின் முதல் கிராமங்களாக அங்கீகரித்து, வளர்ச்சியடைந்த இந்தியாவை நோக்கிய பயணத்தில் அவற்றைச் செயலாற்றல்மிகு பங்கேற்பாளர்களாக மாற்றுவதற்கான பிரதமரின் தொலைநோக்குப் பார்வையை நனவாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## 2 கட்டங்களாக நடத்தப்பட்டது

வளர்ச்சியடைந்த துடிப்பான கிராமத் திட்டம் 2026, இவ்வாண்டு ஜூன் 4 முதல் ஜூன் 30-ம் தேதி வரை இரண்டு கட்டங்களாக நடத்தப்பட்டது. இது லடாக், இமாச்சலப் பிரதேசம், உத்தராகண்ட் ஆகிய பகுதிகளில் உள்ள 74 'துடிப்பான கிராமங்களை' உள்ளடக்கியது. மூன்று லட்சத்திற்கும் அதிகமான இளைஞர்கள் பங்கேற்ற நாடு தழுவிய இணையவழி வினாடி வினாப் போட்டி மூலம், ஒவ்வொரு மாநிலத்தையும் யூனியன் பிரதேசத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 400-க்கும் அதிகமான இளம் பங்கேற்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## திட்டத்தின் கீழ் பல்வேறு செயல்பாடுகள்

வளர்ச்சியடைந்த துடிப்பான கிராமங்கள் திட்டம் 2026-ன் கீழ், பங்கேற்பாளர்கள் உள்ளூர் மக்களுடன் தங்கி, தூய்மைப் பணிகள் மேற்கொண்டு, அரசுத் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள், இளைஞர் மாநாடுகள், கலாச்சாரப் பரிமாற்ற நிகழ்ச்சிகள், மரக்கன்றுகள் நடும் இயக்கங்கள், சிறு ஊராட்சி மாதிரிச் செயல்பாடுகள், உள்ளூர் கைவினைக்கலைஞர்களுடனான கலந்துரையாடல்கள், முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்களுக்குச் சென்று பார்வையிடுதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இத்திட்டம், இந்தியாவின் எல்லைப் பகுதிகளின் சமூக - பொருளாதாரச் சூழல், கலாச்சாரப் பாரம்பரியம், வளர்ச்சிக்கான தேவைகள் ஆகியவை குறித்த நேரடி அனுபவத்தைப் பங்கேற்பாளர்களுக்கு வழங்கியது. மேலும், இது சமூகப் பங்கேற்பு, தேசிய ஒற்றுமை, எல்லைக் கிராமங்களின் முக்கியத்துவம் ஆகியவை குறித்த ஆழமான புரிதலையும் வளர்த்தது.

எல்லைப் பகுதிகளில் சுற்றுலாவும் செழித்து வளர்ந்து வருகிறது. அதிக அளவில் மக்கள் நடமாட்டமின்றி இருந்த கிராமங்கள், இப்போது மீண்டும் பல்வேறு செயல்பாடுகளால் பரபரப்பாகி வருகின்றன. மாணவிகள் பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் செல்கின்றனர். தரமான கல்விக்கும் நல்ல வருமானத்திற்கும் உகந்த சூழல் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. துடிப்பான கிராமங்கள் திட்டம் எல்லைக் கிராமங்களில் இந்த வளர்ச்சியை மேலும் விரைவுப்படுத்துகிறது. இந்நிகழ்ச்சியின் போது, "21-ம் நூற்றாண்டில் உலகத்தை வடிவமைக்கும் பொறுப்பு இந்திய இளைஞர்களுக்கே உள்ளது; இதுவே அவர்களின் உண்மையான இலக்கு" என்ற தமது உறுதியான கருத்தைப் பிரதமர் திரு. நரேந்திர மோடி மீண்டும் வலியுறுத்தினார். ●

தேசிய விண்வெளி தினம் ஆகஸ்ட் 23

## இந்தியாவின் முதல் தனியார் புவி சுற்றுப்பாதை செலுத்து வாகனம்

# விக்ரம்–1 வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது

**கோடிக்கணக்கான இந்தியர்களின் திறமையாலும் ஆற்றலாலும் உந்தப்பட்டு, உலகளாவிய விண்வெளித் துறையில் நாடு தனக்கென ஒரு வலுவான அடையாளத்தை உருவாக்கி வருகிறது. விண்வெளித் துறையில் மத்திய அரசு கொண்டு வந்துள்ள குறிப்பிடத்தக்க மாற்றமே இதற்கு முக்கியக் காரணமாகும். அரசின் முற்போக்கான கொள்கைகள், இன்றைய இளைஞர்களுக்கும், தனியார் நிறுவனங்களுக்கும் புத்தொழில் நிறுவனங்களுக்கும் அளவற்ற வாய்ப்புகளை வழங்கி வருகின்றன. இந்தியாவின் முதல் தனியார் செலுத்து வாகனமான (ராக்கெட்) 'விக்ரம்–1' வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது இதற்கு ஒரு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும். உலக விண்வெளிப் பொருளாதாரத்தில் இந்தியா ஒரு முக்கியமான, பிரதான சக்தியாக வேகமாக வளர்ந்து வருகிறது என்பதற்கு இது ஒரு சான்றாக அமைந்துள்ளது.**




**'விக்ரம்–1' ராக்கெட் வெற்றிகரமாக செலுத்தப்பட்டது ஒரு தனிப்பட்ட திட்டத்தின் வெற்றி மட்டுமின்றி, புத்தாக்கம், துணிச்சலான கொள்கை சீர்திருத்தங்கள், வலுவான அரசு – தனியார் ஒத்துழைப்பு ஆகியவற்றால் ஏற்படக் கூடிய ஒரு புதிய சகாப்தத்தின் தொடக்கத்தைக் குறிக்கிறது. இந்தத் திட்டம், சர்வதேச விண்வெளித் துறையில் நம்பகமான, உறுதியான, தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்ட ஒரு நாடாக இந்தியாவின் நிலையை மேலும் வலுப்படுத்தியுள்ளது என்று விண்வெளித் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.**

விக்ரம்–1 விண்ணில் செலுத்தப்பட்ட நிகழ்வை முழுமையாகக் காண இந்த க்யூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

**தேசிய விண்வெளி தினம், இந்திய இளைஞர்களுக்கு உற்சாகத்தையும் உத்வேகத்தையும் அளிக்கும் ஒரு தருணமாகவும், தேசத்திற்குப் பெருமை சேர்க்கும் ஒன்றாகவும் விளங்குகிறது.**

## எதிர்காலத்தில் வர்த்தக ரீதியில் புவி சுற்றுவட்டப் பாதைக்கு ராக்கெட்டுகளை செலுத்தும் சேவைகளுக்கான வலுவான அடித்தளம்

விக்ரம்-1 நாட்டின் முதல் தனியார் புவி சுற்று வட்டப்பாதை செலுத்து வாகனம் ஆகும். இது 350 கிலோகிராம் வரையிலான சுமையை (பேலோட்) புவியின் தாழ் சுற்றுப்பாதையில் செலுத்தும் திறன் கொண்டது. சுமார் 22 மீட்டர் உயரம் கொண்ட இந்த செலுத்து வாகனம், இந்தியாவின் முதல் முழு கார்பன்-கலப்பு சுற்றுப்பாதை ராக்கெட், சுற்றுப்பாதை சரிசெய்தல் தொகுதிக்கு ஆற்றலளிக்கும் 100% முப்பரிமாண அச்சிடப்பட்ட திரவ இயந்திரம், மேம்பட்ட மிகக்-குறைந்த அதிர்ச்சி கொண்ட நியூமேடிக் பிரிப்பு அமைப்பு, நாட்டின் மிக நீளமான ஒரே சீரான பெரிய கார்பன்-கலப்பு ராக்கெட் நிலைகளில் ஒன்று என பல உள்நாட்டு தொழில்நுட்ப சாதனைகளை உள்ளடக்கியுள்ளது. இந்த வெற்றிகரமான திட்டம், முக்கியமான உந்துவிசை, வானூர்தி மின்னணுவியல், தொலை அளவியல், வழிகாட்டல், விமானக் கட்டுப்பாட்டு அமைப்புகள் ஆகியவற்றைச் சரிபார்த்து உறுதிப்படுத்தி செயல்படுத்தப்பட்டது. இதன் மூலம், இந்தியாவில் எதிர்கால வணிக ரீதியிலான, புவி சுற்று வட்டப்பாதை செலுத்து வாகன சேவைகளுக்கு ஒரு வலுவான அடித்தளம் அமைக்கப்பட்டுள்ளது.




## விண்வெளிச் சூழல் அமைப்பில் ஒரு பெரிய மாற்றம்

2020-ம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட முக்கியச் சீர்திருத்தங்களுக்குப் பிறகு, இந்தியாவின் விண்வெளிச் சூழலமைப்பு ஒரு மகத்தான மாற்றத்தக் கண்டுள்ளது சில ஆண்டுகளுக்கு முன்பு வரை தனியார் விண்வெளிச் சூழலமைப்பு என்று நடைமுறையில் எதுவும் இல்லாத நிலையில், இப்போது இந்தியாவில் 400-க்கும் அதிகமான விண்வெளிப் புத்தொழில் நிறுவனங்கள் உள்ளன. விக்ரம்-1-க்குப் பின்னால் உள்ள புத்தொழில் நிறுவனமான ஸ்கைரூட், நாட்டின் முதல் விண்வெளி யூனிகார்ன் (1 பில்லியன் டாலருக்கும் அதிகமான சந்தை மதிப்புக் கொண்ட) நிறுவனமும் ஆகும்.



**$9** பில்லியன் டாலர் மதிப்பை இந்திய விண்வெளிப் பொருளாதாரம் நெருங்கிக்கொண்டிருப்பது ஒரு மைல்கல் ஆகும்.

**$44+** பில்லியன் டாலர் அடுத்த பத்து ஆண்டுகளில் விண்வெளிப் பொருளாதாரத்திற்கான தேசிய இலக்கு அதிகமாகும்.

கொள்கை சீர்திருத்தங்கள் எவ்வாறு புத்தாக்கத்தை விரைவுபடுத்தும் என்பதற்கு விக்ரம்-1-ன் வெற்றி ஒரு சான்றாக விளங்குகிறது.



*"விக்ரம்-1 வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டதற்கு வாழ்த்துகள். இது இந்தியாவின் விண்வெளிப் பயணத்தில் ஒரு திருப்புமுனையான தருணம். அதிகரித்து வரும் நமது தனியார் துறையின் பங்களிப்பு, புதிய எல்லைகளைத் திறந்து, புத்தாக்கத்தை ஊக்குவிக்கிறது. இந்தச் சாதனை, எண்ணற்ற இளைஞர்களைப் பெரிய கனவுகளைக் காணவும், அச்சமின்றிப் புதுமைகளைப் படைக்கவும் ஊக்குவிக்கும்."*

*– பிரதமர் திரு. நரேந்திர மோடி*



## நாட்டின் முழுமையான வளர்ச்சியின் கூட்டாளிகள்...

# விளையாட்டுகளின் சக்தி

**இந்தியாவில் ஆகஸ்ட் மாதம் விளையாட்டுக் கொண்டாட்ட மாதமாக மாறியுள்ளது. ஆகஸ்ட் 29 அன்று தேசிய விளையாட்டு தினத்தை நாடு கொண்டாடுகிறது. இந்த ஆண்டு இது ஃபிட் இந்தியா இயக்கத்தின் 7-வது ஆண்டு நிறைவையும் குறிக்கிறது. ஃபிட் இந்தியாஇயக்கம், நாடு முழுவதும் உடல்நலம், உடற்தகுதி ஆகியவை குறித்த விழிப்புணர்வையும் தீவிர ஈடுபாட்டையும் வளர்த்துள்ளது. இதனால்தான் மத்திய அரசு, ஐந்து தூண்களின் அடிப்படையில் 'தேசிய விளையாட்டுக் கொள்கை 2025 : தேசத்தின் முழுமையான வளர்ச்சிக்காக விளையாட்டின் ஆற்றலைப் பயன்படுத்தும் ஒரு தொலைநோக்குப் பார்வை' என்ற அடிப்படையில் விளையாட்டுச் சூழலை வலுப்படுத்தி வருகிறது.**

புகழ்பெற்ற ஹாக்கி வீரரான மேஜர் தியான் சந்தின் பிறந்தநாளை முன்னிட்டு, இந்தியா ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 29 அன்று தேசிய விளையாட்டு தினத்தைக் கொண்டாடுகிறது. 2036-ம் ஆண்டுக்குள் விளையாட்டில் உலகின் முதல் 10 நாடுகளில் ஒன்றாகவும், 2047-ம் ஆண்டுக்குள் முதல் 5 நாடுகளில் ஒன்றாகவும் மாறும் நோக்கில் நாடு விளையாட்டு வீரர்களைப் பயிற்றுவித்து வருகிறது. இந்தச் சூழலில், மக்களின் உடற்தகுதியை ஒரு முக்கிய முன்னுரிமையாகக் கொண்டு பிரதமர் நரேந்திர மோடி செயல்பட்டு வருகிறார். ஃபிட் இந்தியா இயக்கம் 2019-ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. அது பின்னர் நாடு தழுவிய உடல்தகுதிப் புரட்சியாக உருவெடுத்தது. 2025-ம் ஆண்டில், ஃபிட் இந்தியா இயக்கத்தின் கீழ் நாடு தழுவிய விளையாட்டு, உடற்பயிற்சி சார்ந்த கொண்டாட்டத்தில் 35 கோடிக்கும் அதிகமான மக்கள் பங்கேற்றனர்.

மத்திய அரசு, 2025 ஜூலை 10 அன்று 'கேலோ இந்தியா கொள்கை-2025' என்ற புதிய தேசிய விளையாட்டுக் கொள்கையை அறிமுகப்படுத்தியது. இந்தப் புதிய கொள்கையானது, 2001-ம் ஆண்டின் தேசிய விளையாட்டுக் கொள்கைக்குப் பதிலாகக் கொண்டுவரப்பட்டுள்ளது. இக்கொள்கையின் கீழ், இந்தியாவை ஒரு உலகளாவிய விளையாட்டு வல்லரசாக நிலைநிறுத்துவதையும், 2036 ஒலிம்பிக் உட்பட சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் சிறந்து விளங்குவதை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்ட, தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய ஐந்து தூண்களைக் கொண்ட கட்டமைப்புக்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இக்கொள்கையானது ஆரோக்கியமான, அதிக ஈடுபாடுள்ள, வலுவான மக்களை உருவாக்கும்.



கேலோ இந்தியா

## தூண்–1

### உலக அரங்கில் உயர்சிறப்பு

இந்தத் தூணின் கீழ், கேலோ இந்தியா தேசிய விளையாட்டு மேம்பாட்டுத் திட்டம், தேசிய விளையாட்டுக் கூட்டமைப்புகளுக்கான உதவி, தேசிய விளையாட்டு மேம்பாட்டு நிதி, தேசிய விளையாட்டு அறிவியல், ஆராய்ச்சி மையம் நிறுவுதல் போன்ற முன்முயற்சிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**28,234**

விளையாட்டு வீரர்கள், நாடு முழுவதும் அறிவிக்கப்பட்ட 1,066 கேலோ இந்தியா மையங்களில் அடித்தள அளவிலான பயிற்சியைப் பெற்று வருகின்றனர்.

**12,000**

விளையாட்டு வீரர்களுக்கு, 23 தேசிய சிறப்பு மையங்கள், 50–க்கும் அதிகமான உயர் செயல்திறன் பயிற்சி மையங்கள் ஆகியவை மூலம் ஆதரவு அளிக்கப்படுகிறது.

**35**

கேலோ இந்தியா மாநில சிறப்பு மையங்கள், 34 மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில் உள்ள 2,466 விளையாட்டு வீரர்களுக்கு உயர் செயல்திறன் ஆதரவை வழங்கி வருகின்றன.

**₹6.28**

லட்சம் ரூபாய் நிதி உதவி, பயிற்சிக்கான விரிவான ஆதரவின் ஒரு பகுதியாக, ஒவ்வொரு கேலோ இந்தியா விளையாட்டு வீரருக்கும் ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.

இந்திரா காந்தி மைதானத்தில் தேசிய விளையாட்டு அறிவியல், ஆராய்ச்சி மையம் நிறுவப்பட்டுள்ளது.



## தூண்–2

### பொருளாதார வளர்ச்சிக்கு விளையாட்டு

2025–ம் ஆண்டின் தேசிய விளையாட்டுக் கொள்கையானது, விளையாட்டுகளின் பொருளாதார ஆற்றலை எடுத்துரைக்கிறது. இந்தியாவில் முக்கிய சர்வதேச விளையாட்டு போட்டிகளை நடத்துவதற்கான முன்முயற்சிகளுடன், விளையாட்டுப் பொருட்கள் உற்பத்திச் சூழல் அமைப்பை வலுப்படுத்தவும், தனியார் துறைப் பங்கேற்பை ஊக்குவிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**322**

கேலோ இந்தியா அங்கீகாரம் பெற்ற பயிற்சி மையங்கள் (தனியார் நிறுவனங்கள் உட்பட), உயர்மட்டத் திறமையாளர்களை வளர்ப்பதற்குச் சான்றளிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

2030–ம் ஆண்டு இளையோர் ஒலிம்பிக் போட்டிகளையும், 2036–ம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளையும் நடத்துவதற்கு இந்தியா விருப்பம் தெரிவித்து விருப்பக் கடிதத்தை வழங்கியுள்ளது. இந்தியா இதுவரை ஒலிம்பிக் போட்டிகளை நடத்தியதில்லை.

2025–ம் ஆண்டு புது தில்லியில் நடைபெற்ற முதல் கோ–கோ உலகக் கோப்பையை இந்தியா நடத்தியதுடன், ஆண்கள், பெண்கள் ஆகிய இரு பிரிவுகளிலும் பட்டங்களை வென்றது.

2025–ல் நடைபெற்ற 12–வது உலக பாரா தடகள சாம்பியன்ஷிப் போட்டிகளை இந்தியா நடத்தியது. இதில் 6 தங்கம் உட்பட 22 பதக்கங்களை வென்று, தனது வரலாற்றிலேயே மிகச் சிறந்த செயல்திறனை இந்தியா வெளிப்படுத்தியது.

- எதிர்காலத்தில் ஒலிம்பிக், பாராலிம்பிக் போட்டிகளை நடத்தும் தனது விருப்பத்தைக் கருத்தில் கொண்டு, ஆஸ்திரேலியாவுடன் விளையாட்டு ஒத்துழைப்புக்கான செயல்திட்டத்தை உருவாக்கும் பணிகளை இந்தியா முன்னேடுத்துள்ளது.
- 2026–27–ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், 500 கோடி ரூபாய் மதிப்பிலான விளையாட்டு உபகரணங்கள் உற்பத்தித் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. இது, வேலைவாய்ப்பு, திறன் மேம்பாடு, பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றுக்கான ஒரு உந்துசக்தியாக விளையாட்டை நிலைநிறுத்துகிறது.





தூண் 3

## சமூக மேம்பாட்டிற்காக விளையாட்டுகள்



மகளிர், பழங்குடியின சமூகங்கள், மாற்றுத்திறனாளிகளின் பங்கேற்பை ஊக்குவித்தல், உள்நாட்டு, பாரம்பரிய விளையாட்டுகளை ஆதரித்தல், விளையாட்டை ஒரு சிறந்த தொழில் வாய்ப்பாக நிலைநிறுத்துதல் ஆகியவற்றிற்காக மத்திய அரசு செயலாற்றி வருகிறது.

**2,600+**

அஸ்மிதா லீக்ஸ் (மகளிருக்கான விளையாட்டுப் போட்டிகள்) கேலோ இந்தியா திட்டத்தின்கீழ் நடத்தப்பட்டுள்ளன; இதில் 34 விளையாட்டுப் பிரிவுகளைச் சேர்ந்த 3 லட்சத்திற்கும் அதிகமான மகளிர் விளையாட்டு வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர்.

கடந்த ஐந்து ஆண்டுகளில், யோகாசனம், கோ-கோ, கபடி ஆகிய மூன்று பாரம்பரிய விளையாட்டுகள் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் சேர்க்கப்பட்டுள்ளன. மல்லர்கம்பம், தாங்-தா, களரிப்பயட்டு, கட்கா, யோகாசனம் ஆகியவை 'கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுகள், 'கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகள்' ஆகியவற்றின் பல பதிப்புகளில் இடம்பெற்றுள்ளன.

**2026-27**

-ம் ஆண்டிற்கான பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட 'கேலோ இந்தியா' திட்டம், நாட்டின் விளையாட்டுச் சூழல் அமைப்பில் ஒரு பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும்.

தூண் 4

## மக்கள் இயக்கமாக விளையாட்டுகள்

நாடு தழுவிய பிரச்சாரங்கள், சமூக அடிப்படையிலான நிகழ்ச்சிகள் மூலம் விளையாட்டுகளில் பொதுமக்களின் பங்கேற்பையும், உடற்தகுதி சார்ந்த கலாச்சாரத்தையும் ஊக்குவிக்கும் முயற்சிகள் சமீப காலங்களில் அதிகரித்துள்ளன. அனைவருக்கும் விளையாட்டு வசதிகள் கிடைக்க ஊக்குவிக்கப்பட்டு வருகிறது.

- மக்களவைத் தொகுதி அளவில் நாடாளுமன்ற விளையாட்டுத் திருவிழாக்கள் நடத்தப்படுகின்றன.
- 'ஃபிட் இந்தியா' இயக்கத்தின் கீழ், 4.40 லட்சத்திற்கும் அதிகமான பள்ளிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- 'ஃபிட் இந்தியா' இயக்கத்தின் கீழ், 'ஞாயிற்றுக் கிழமைகளில் சைக்கிள் பேரணி', 'ஃபிட் இந்தியா தூய்மை ஓட்டம்', 'ஃபிட் இந்தியா திருவிழா' போன்ற நிகழ்வுகள் ஆண்டு முழுவதும் நடத்தப்படுகின்றன.
- உடற்தகுதி அளவீடுகளைக் கண்காணிக்கும் 'ஃபிட் இந்தியா' செயலி, 13 லட்சத்திற்கும் அதிகமான பதிவிறக்கங்கள் செய்யப்பட்டுள்ளது.




தூண்- 5

## கல்வியுடன் ஒருங்கிணைப்பு (தேசிய கல்வி கொள்கை 2020)

தேசிய விளையாட்டுக் கொள்கையானது, குழந்தைப் பருவத்திலிருந்தே உடல்சார்ந்த செயல்பாட்டுத் திறனை வளர்ப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கிறது. வாழ்நாள் முழுவதும் உடல் தகுதியையும் நல்வாழ்வையும் பின்பற்றுவதற்கு விளையாட்டை ஒரு முக்கியப் பாடமாகக் கருதும் தேசிய கல்விக் கொள்கை 2020-டன் இது ஒத்துப்போகிறது.

- தேசிய கல்விக் கொள்கை 2020-ன் கீழ், விளையாட்டு, உடற்கல்வி ஆகியவை கல்வி அமைப்பின் ஒரு முக்கிய அங்கமாக மாற்றப்பட்டுள்ளன. இனி, மாணவர்கள் விளையாட்டு, கல்வி ஆகிய இரண்டிலும் சிறந்து விளங்குவதற்கான வாய்ப்புகளைப் பெறுவார்கள்.
- விளையாட்டு வீரர்கள், மாணவர்களுக்காகக் கல்விசார் நிலையில் சிறப்புப் பாடத்திட்டங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.
- முதல்முறையாக, ஐஐடி- கள் போன்ற உயர்தரக் கல்வி நிறுவனங்களில் விளையாட்டுக்கான இடஒதுக்கீட்டு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.





## தேசிய விளையாட்டுக் கொள்கையை அமல்படுத்துவதற்கான கட்டமைப்பு

உலகளவில் மதிக்கப்படக்கூடிய, விளையாட்டு வீரர்களை மையமாகக் கொண்ட நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்தும் செயல்முறையை மத்திய அரசு தொடங்கியுள்ளது. தேசிய விளையாட்டு நிர்வாகச் சட்டம், 2025 குறித்த அறிவிப்பைத் தொடர்ந்து, கூடுதல் நிர்வாகச் சீர்திருத்தங்கள், வெளிப்படைத்தன்மையை உறுதிசெய்யும் சட்டங்கள் குறித்தும் அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.

விளையாட்டு மேம்பாட்டிற்காக விளையாட்டுச் சங்கங்களின் ஆதரவைப் பயன்படுத்திக் கொள்வதையும், நிதி உதவியை பெறுவதையும் நோக்கமாகக் கொண்ட ஒரு விளையாட்டு – ஒரு பெரு நிறுவனம் கொள்கை அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒலிம்பிக், விளையாட்டு இயக்கங்களின் அடிப்படையான நிர்வாக நேர்மை, அறநெறி, நியாயமான விளையாட்டு ஆகிய கோட்பாடுகளை உள்ளடக்கிய ஒரு விரிவான சட்டக் கட்டமைப்பின் மூலம், தேசிய விளையாட்டுச் சம்மேளனங்களில் பொறுப்புடைமை, வெளிப்படைத்தன்மை, சிறந்த நிர்வாகம் ஆகியவற்றை உறுதி செய்வதே இந்த விளையாட்டுச் சட்டங்கள், விதிமுறைகள் ஆகியவற்றின் நோக்கமாகும்.

மாநிலங்கள் தங்களுக்கென பிரத்யேக விளையாட்டுக் கொள்கைகளை வகுக்கும்போது தேசிய நலன்களைக் கருத்தில் கொள்ள ஊக்குவிக்கும் வகையிலான ஒரு மாதிரி விளையாட்டுக் கொள்கை உள்ளது.



இந்திய பேட்மிண்டன் வீராங்கனை பி.வி. சிந்து, ஜப்பான் ஓபன் 2026 பட்டம் வென்று வரலாறு படைத்தார். சிந்து இந்தப் பட்டத்தை வென்ற முதல் இந்திய வீராங்கனையானார்.

## நாட்டின் பெருமையை உயர்த்தும் இந்திய விளையாட்டு வீரர்கள்

- •இந்தியா ஆறாவது முறையாக ஐசிசி 19 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் கிரிக்கெட் உலகக் கோப்பையை வென்றது.
- •2025 கோ–கோ உலகக் கோப்பையில் ஆடவர், மகளிர் ஆகிய இரு பிரிவுகளிலும் இந்தியா தங்கப் பதக்கங்களை வென்றது.
- •2025 செபக் டக்ரவ் உலகக் கோப்பையில் இந்திய அணி 7 பதக்கங்களை வென்றது.
- •இந்திய மகளிர் கிரிக்கெட் அணி முதல் முறையாக 2025 ஐசிசி மகளிர் கிரிக்கெட் உலகக் கோப்பையை வென்றது.
- •2025 ஐசிசி 19 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் டி20 உலகக் கோப்பையை வென்றது.
- •பார்வையற்றோருக்கான இந்திய மகளிர் கிரிக்கெட் அணி, தொடர் முழுவதும் தோல்வியடையாமல், முதல்முறையாக நடத்தப்பட்ட பார்வையற்றோருக்கான மகளிர் டி20 உலகக் கோப்பையை (2025) வென்றது.

*இந்திய பேட்மிண்டன் துறையில் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனை! ஜப்பான் ஓபன் பேட்மிண்டன் 2026 போட்டியில் வெற்றி பெற்ற பி.வி. சிந்துவுக்கு வாழ்த்துகள். இப்போட்டி முழுவதும் அவரது உறுதியும், அபாரமான திறமையும் வெளிப்பட்டன. இப்பட்டத்தை வென்ற முதல் இந்திய வீராங்கனை அவரே என்பதால், இச்சாதனை மிகவும் சிறப்பானதாக அமைகிறது. நாடு முழுவதும் உள்ள எண்ணற்ற இளம் விளையாட்டு வீரர்களை, இத்துறையில் ஈடுபடவும் சிறந்து விளங்கவும் இது ஊக்கமளிக்கும்.*

*– பிரதமர் திரு. நரேந்திர மோடி*



காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் இந்திய விளையாட்டு வீரர்கள் நாட்டிற்குப் பெருமை சேர்த்துள்ளனர்

# இந்தியா மொத்தம்

## 39 பதக்கங்களை வென்றது; அதில் 13 தங்கப் பதக்கங்கள் அடங்கும்.

ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் நடைபெற்ற 2026 காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய இந்தியா 13 தங்கம், 17 வெள்ளிப் பதக்கங்கள் உட்பட மொத்தம் 39 பதக்கங்களை வென்றது. இந்தச் சிறப்பான செயல்பாட்டின் மூலம், பதக்கப் பட்டியலில் இந்தியா நான்காவது இடத்தைப் பிடித்தது. இந்திய விளையாட்டு வீரர்களின் சாதனைகள் குறித்துப் பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்த நிலையில், 2030–ம் ஆண்டில் நடைபெறவுள்ள காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளின் நூற்றாண்டு விழாப் பதிப்பை நடத்துவதற்கான முழுத் தயாரிப்பு, உறுதி ஆகியவற்றுடன் இந்தியா தற்போது முன்னேறுகிறது...



தங்கம்

13



வெள்ளி

17



வெண்கலம்

9

மொத்தம் 39

| தரவரிசை | நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தப் பதக்கங்கள் |
|---|---|---|---|---|---|
| 1. | ஆஸ்திரேலியா | 70 | 45 | 56 | 171 |
| 2. | இங்கிலாந்து | 29 | 45 | 36 | 110 |
| 3. | கனடா | 19 | 20 | 23 | 62 |
| 4. | இந்தியா | 13 | 17 | 9 | 39 |
| 5. | ஸ்காட்லாந்து | 13 | 09 | 17 | 39 |





## அடுத்த காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் 2030-ம் ஆண்டில் இந்தியாவின் அகமதாபாத்தில் நடைபெறும்.

## 2026 காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளின் சிறப்பான நிறைவு விழா

ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் நடைபெற்ற 2026 காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளின் பிரம்மாண்டமான நிறைவு விழா, இந்தியாவின் கலாச்சாரப் பாரம்பரியத்தையும், அகமதாபாத்தில் 2030–ம் ஆண்டுக்கான போட்டிகளை நடத்தும் இந்தியாவின் உறுதியையும் பறைசாற்றியது. இந்தியாவின் துடிப்பான கலாச்சார நிகழ்ச்சி பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்தது; அதேவேளையில், காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளின் அடுத்த பதிப்பை நடத்தும் நகரமாக அகமதாபாத்தின் பயணம் அதிகாரப்பூர்வமாகத் தொடங்கியதையும் இந்நிகழ்வு குறித்தது. 'வந்தே மாதரம்', 'சிவ ஸ்தோத்திரம்', 'சுனோ கௌர் சே துனியா வாலோன்' ஆகிய பாடல்களின் மனதை நெகிழ வைக்கும் இசை ஒலித்தபோது, இந்திய ரசிகர்கள் மூவண்ணக் கொடியை அசைத்து உற்சாகமாக ஆரவாரம் செய்தனர். சர்வதேச அளவில் திரண்டிருந்த ஏராளமான பார்வையாளர்களும் இந்திய இசை, கலாச்சார நிகழ்ச்சிகளை ரசித்தனர். கிளாஸ்கோவிலிருந்து அகமதாபாத்திற்கு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் பொறுப்பை ஒப்படைக்கும் உணர்வுபூர்வமான, அடையாள நிகழ்வும் இதில் இடம்பெற்றது. விழாவின் போது, காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளுக்கான கொடி குஜராத் மாநிலத்தின் துணை முதலமைச்சர் ஹர்ஷ் சங்வியிடம் அதிகாரபூர்வமாக ஒப்படைக்கப்பட்டது. இதன் மூலம், 2030 காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் பொறுப்பை அகமதாபாத் அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொண்டது. 2030–ம் ஆண்டுக்கான போட்டிகள் இப்போட்டி வரலாற்றில் சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்தவை; ஏனெனில், இப்போட்டிகள் தொடங்கப்பட்டு 100 ஆண்டுகள் நிறைவடைவதைக் குறிக்கும் வகையில் இது நூற்றாண்டு விழாப் பதிப்பாக அமையவுள்ளது. ஆஸ்திரேலியாவிற்கு அடுத்தபடியாக, காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை இருமுறை நடத்தும் உலகின் இரண்டாவது நாடாக இந்தியா அமையவுள்ளது.

## குத்துச்சண்டையில் இந்தியாவின் மிகச் சிறப்பான செயல்பாடு

இந்தியக் குத்துச்சண்டை வீரர்கள் மொத்தம் 10 பதக்கங்களை (7 தங்கம் மற்றும் 3 வெள்ளி) வென்றனர். காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளின் வரலாற்றிலேயே குத்துச்சண்டைப் பிரிவில் இந்தியாவின் மிகச் சிறந்த செயல்பாடாக இது அமைந்தது. பளுதூக்குதல், ஜூடோ, குத்துச்சண்டை ஆகியவற்றில் இந்தியா சிறந்து விளங்கிய அதே வேளையில், மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டிகளிலும் நாடு மிகச் சிறந்த செயல்பாட்டை வெளிப்படுத்தியது.

## பதக்கங்களை வென்று நாட்டிற்குப் பெருமை சேர்த்தல்

கிளாஸ்கோ 2026 காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் குறைந்த எண்ணிக்கையிலான விளையாட்டுப் பிரிவுகளுடன் நடத்தப்பட்டன; இதில் இந்தியா பாரம்பரியமாகச் சிறந்து விளங்கும் பல விளையாட்டுப் பிரிவுகள் இடம்பெறவில்லை. இருப்பினும், பர்மிங்காம் 2022 போட்டிகளில் இதே பிரிவுகளில் வென்ற 30 பதக்கங்களின் எண்ணிக்கையை முறியடித்து, மொத்தம் 39 பதக்கங்களை வென்றதன் மூலம் இந்திய அணி குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றது. இந்திய விளையாட்டுத் துறையின் வளர்ந்து வரும் வலிமையும், உலக அரங்கில் நாட்டின் வலுவான இருப்பும் தற்போது தெளிவாகத் தெரிகின்றன; பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வை கொண்ட தலைமைத்துவம், விளையாட்டுத் துறை மீதான அவரது அர்ப்பணிப்பு, விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்படும் தொடர்ச்சியான ஊக்கம் ஆகியவற்றின் விளைவாகவே இது சாத்தியமாகியுள்ளது.

*"கிளாஸ்கோ காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் நமது அணியினர் வெளிப்படுத்திய திறனைப் பார்த்து நான் பெருமிதம் கொள்கிறேன். 13 தங்கப் பதக்கங்கள் உட்பட மொத்தம் 39 பதக்கங்களை இந்தியா வென்றிருப்பது மிகுந்த மகிழ்ச்சிக்குரிய அம்சமாகும். இப்போட்டிகள் முழுவதும், நமது திறமையான விளையாட்டு வீரர்கள் மிகச்சிறந்த திறமை, மன உறுதி, அர்ப்பணிப்பு உணர்வை வெளிப்படுத்தினார்கள். அவர்களின் கடின உழைப்பு நமது இளைஞர்களுக்குத் தொடர்ந்து ஊக்கமளிக்கும். இந்திய அணியினரின் எதிர்கால முயற்சிகளுக்கு எனது மனமார்ந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். – பிரதமர் திரு. நரேந்திர மோடி.*






2024–ம் ஆண்டிற்கான 72–வது தேசிய திரைப்பட விருதுகள் அறிவிக்கப்பட்டன.

# 'ஆர்டிகிள் 370' திரைப்படம்

## சிறந்த முழுநீளத் திரைப்படத்திற்கான விருதை வென்றது

**2024–ம் ஆண்டிற்கான 72– வது தேசிய திரைப்பட விருதுகளை வென்றவர்கள் ஜூலை 18 அன்று அறிவிக்கப்பட்டனர். இதில் 'ஆர்டிகிள் 370' சிறந்த முழுநீளத் திரைப்படத்திற்கான விருதைப் பெற்றது; அதேவேளையில், 'பங்கர்' சிறந்த திரைப்படத்திற்கான விருதையும், 'ராம்–நாமி' சிறந்த ஆவணப்படத்திற்கான விருதையும் வென்றன.......**

2024–ம் ஆண்டிற்கான 72– வது தேசிய திரைப்பட விருதுகள் அறிவிப்பில், கார்த்திக் ஆர்யன், மம்முட்டி ஆகியோர் முறையே 'சந்து சாம்பியன்', 'பிரமயுகம்' படங்களுக்காகச் சிறந்த நடிகராகவும் (முன்னணிக் கதாபாத்திரம்), யாமி கௌதம் 'ஆர்டிகிள் 370' படத்திற்காகச் சிறந்த நடிகையாகவும் (முன்னணிக் கதாபாத்திரம்) தேர்ந்தெடுக்கப்பட்டனர். ரந்தீப் ஹூடா 'சுதந்திரிய வீர் சாவர்க்கர்' படத்திற்காகச் சிறந்த அறிமுக இயக்குநருக்கான விருதை வென்றார். அதேவேளையில், 'கல்கி 2898 ஏடி', 'அமரன்', 'புஷ்பா: தி ரூல் – பாகம் 2', 'பூல் புலையா 3', 'ஸ்திரீ 2' போன்ற பெரும் வெற்றிப் படங்கள் முக்கிய விருதுகளை வென்றன; இவை இந்தியத் திரைப்படத்துறையின் பன்முகத்தன்மையையும் சிறப்பான தரத்தையும் பிரதிபலிக்கின்றன.

இந்த விருதுகளை ஜெயராஜ் (முழுநீளத் திரைப்பட நடுவர் குழுத் தலைவர்), ஆசிம் சின்ஹா (முழுநீளமல்லாத திரைப்பட நடுவர் குழுத் தலைவர்), ஏ. சந்திரசேகர் (திரைப்படம் குறித்த சிறந்த எழுத்துக்கான நடுவர் குழுத் தலைவர்) ஆகியோர் அறிவித்தனர். தேசிய திரைப்பட விருதுகள் இந்தியத் திரைப்படத்துறையில் மிக உயர்ந்த, மதிப்புமிக்க கௌரவமாகத் திகழ்கின்றன. மத்திய அரசின் தகவல், ஒலிபரப்பு அமைச்சகத்தின் சார்பில் ஆண்டுதோறும் நடத்தப்படும் இவ்விழா, இந்தியத் திரைப்படத்துறையின் பன்முகத்தன்மை, கலைத்திறன், சமூக முக்கியத்துவத்தைக் கொண்டாடுகிறது.

**சிறந்த நடிகைக்கான விருதை யாமி கௌதம் வென்றார்**




சிறந்த முழுநீளத் திரைப்படத்திற்கான விருதை 'ஆர்டிகிள் 370' வென்றது.

**கார்த்திக் ஆர்யன், மம்முட்டி ஆகியோர் முறையே 'சந்து சாம்பியன்', 'பிரமயுகம்' படங்களுக்காகச் சிறந்த நடிகருக்கான விருதை வென்றனர்.**



கார்த்திக் ஆர்யன்



மம்முட்டி




**'சுதந்திரிய வீர் சாவர்க்கர்' படத்திற்காக ரன்தீப் ஹூடா சிறந்த அறிமுக இயக்குநருக்கான விருதை வென்றார்**




**'பங்கர்' சிறந்த திரைப்படத்திற்கான விருதை வென்றது.**




**'ராம்-நாமி' சிறந்த ஆவணப்படத்திற்கான விருதை வென்றது.**




பிளாக்பஸ்டர் படங்களான 'கல்கி 2898 கி.பி', 'புஷ்பா: தி ரூல் பார்ட் 02', 'ஸ்திரீ 2', 'அமரன்' ஆகியவை தேசிய திரைப்பட விருதுகளில் ஆதிக்கம் செலுத்தின.

# சரணடைவதை விடத் தியாகத்தையே தேர்ந்தெடுத்தார்



**அடிமைத்தனத்தின் பிடியிலிருந்து நாட்டை விடுவிக்கவும், ஆங்கிலேயர்களின் அடக்குமுறையை எதிர்த்துப் போராடவும் முன்வந்தவர்களுள் அவந்திபாய் லோதிக்கு ஒரு சிறப்பான இடம் உண்டு. 1857-ம் ஆண்டு நடைபெற்ற எழுச்சியில் முக்கியப் பங்காற்றிய ராணி அவந்திபாய், சிறந்த நிர்வாகத்திற்கு முன்மாதிரியாகத் திகழ்ந்ததுடன், தன் வாழ்நாள் முழுவதும் தாய்நாட்டின் கண்ணியத்தைக் காப்பதில் உறுதியுடன் இருந்தார். அவரது வாழ்க்கை வரலாறு என்றென்றும் நாட்டிற்குப் பெருமை சேர்க்கும்.**

பிறப்பு: ஆகஸ்ட் 16, 1831 | இறப்பு: மார்ச் 20, 1858.

1831-ம் ஆண்டு ஆகஸ்ட் 16- ம் தேதி மத்தியப் பிரதேசத்தின் சியோனியில் பிறந்த அவந்திபாய், தேசத்தின் பெருமையின் அழியாத அடையாளமாகத் திகழ்ந்தவர். சிறுவயதிலேயே தனது தந்தையான ஜுஜார் சிங்கிடமிருந்து வாள்வீச்சு, குறிபார்த்துச் சுடுதல், குதிரையேற்றம் ஆகியவற்றில் அவர் பயிற்சி பெற்றார். பருவமடைந்ததும், ராம்கர் மன்னர் லக்ஷ்மன் சிங் லோதியின் மகனான இளவரசர் விக்ரமாதித்யாவை அவர் மணந்தார். மன்னரின் உடல்நலக்குறைவு, வாரிசுகள் சிறுவர்களாக இருந்த சூழல் காரணமாக, ராணிக்கு நாட்டின் நிர்வாகப் பொறுப்பை ஏற்கும் நிலை ஏற்பட்டது; அப்போது அவர் ஒரு திறமையான நிர்வாகியாகத் தன்னை நிரூபித்துக் காட்டினார். அக்காலகட்டத்தில், நாட்டின் குறுநில அரசுகளைத் தங்கள் ஆட்சியின் கீழ் கொண்டுவர ஆங்கிலேயர்கள் பல்வேறு கொள்கைகளை வகுத்து வந்தனர். 'வாரிசுரிமை இழப்புக் கொள்கை'யின் கீழ், ராம்கரைக் கைப்பற்ற ஆங்கிலேயர்கள் 'கோர்ட் ஆஃப் வார்ட்ஸ்' எனும் நிர்வாக அமைப்பை நியமித்தனர். இதற்குப் பதிலடியாக, ராணி அவந்திபாய் கிளர்ச்சிக்கான முழக்கத்தை எழுப்பினார். அண்டை நாட்டு மன்னர்களையும் நிலப்பிரபுக்களையும் ஒன்றிணைப்பதற்காக, அவர் கடிதங்களுடன் வளையல்களையும் அனுப்பி வைத்தார்; இச்செயல் அந்தப் புரட்சியின் தனித்துவமான அடையாளமாக மாறியது. அந்தக் கடிதத்தில் அவர், "ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிடத் தயாராகுங்கள்; இல்லையெனில் வளையல்களை அணிந்துகொண்டு வீட்டிலேயே இருங்கள்" என்று குறிப்பிட்டிருந்தார். 1857-ம் ஆண்டு நடைபெற்ற இந்திய விடுதலைப் போரின்போது, ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிராகப் போராட இளைஞர்களை ஒருங்கிணைத்து அவர் மிகச்சிறந்த தலைமைத்துவத்தை வெளிப்படுத்தினார்.

கைரி போரில், அவர் தனது வியூக சாதுரியத்தைப் பயன்படுத்தி பிரிட்டிஷ் தளபதி வாடிங்டனைப் பின்வாங்கச் செய்து, தனது நிலப்பரப்பை மீட்டார். மேலும், பல பகுதிகளை விடுவித்ததன் மூலம் தனது வீரத்தையும் உறுதியையும் அவர் வெளிப்படுத்தினார். அதுமட்டுமின்றி, ஆங்கிலேயர்களின் பெரும் இராணுவ பலத்தால் சூழப்பட்டிருந்தபோதும், தேவ்கர்கர் மலைகளில் அவர் வீரத்துடன் போரிட்டார். 1858-ம் ஆண்டு மார்ச் 20-ம் தேதி, ஆங்கிலேயரால் தான் பிடிக்கப்படக்கூடும் என்பதை உணர்ந்து, தனது வாளால் தன் உயிரை மாய்த்துக்கொண்டு, தன் நாட்டிற்காக உயிர்த் தியாகம் செய்தார்.

> *வீரமிக்க போர் வீராங்கனையான ராணி அவந்திபாய் லோதியின் வாழ்க்கை துணிச்சல், தியாகம், தேசபக்தி ஆகியவற்றிற்கு ஒரு இணையற்ற உதாரணமாகத் திகழ்கிறது. 1857-ம் ஆண்டு நடைபெற்ற எழுச்சியின்போது, அவர் ஆங்கிலேயர்களுக்கு எதிராகக் கடுமையாகப் போரிட்டதோடு, சரணடைவதை விட வீரமரணம் அடைவதையே தேர்ந்தெடுத்தார். அவரது தியாகம், தேசத்தின் மீதான அர்ப்பணிப்பு, சுயமரியாதை குறித்த ஒரு அழியாத செய்தியாக விளங்குகிறது. அவரது பிறந்தநாளில் அவருக்கு மரியாதைக்குரிய அஞ்சலிகள்.*
>
> *-திரு. அமித் ஷா, மத்திய உள்துறை அமைச்சர்*

நாட்டின் கௌரவம், கண்ணியம், சுதந்திரத்தை நிலைநாட்ட அனைத்தையும் தியாகம் செய்த அவந்திபாய், 'இந்தியாவின் ஜோன் ஆஃப் ஆர்க்' என்று போற்றப்படுகிறார். அவர் பெண்களின் அதிகாரம், சுயமரியாதையின் அழியாத சின்னமாக நிற்கிறார். அஞ்சல் துறை அவரது நினைவாக நினைவு அஞ்சல் தலையை வெளியிட்டுள்ளது. அவருக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக ஜபல்பூரில் உள்ள பர்கி அணைக்கு, 'ராணி அவந்திபாய் சாகர்' எனப் பெயரிடப்பட்டுள்ளது. ●



**Narendra Modi**
@narendramodi

बीते 12 वर्षों में हमारी सरकार ने स्वास्थ्य सेवाओं के क्षेत्र में देश का सामर्थ्य बढ़ाया है, जिससे आज लोगों को इलाज की बेहतर सुविधाएं मिल रही हैं। हमारे प्रयासों का एक बड़ा परिणाम यह भी है कि भारत मेडिकल टूरिज्म का एक अहम डेस्टिनेशन बन रहा है।



**Rajnath Singh**
@rajnathsingh

राष्ट्रीय सुरक्षा केवल सैनिकों की जिम्मेदारी नहीं है, बल्कि यह 140 करोड़ देशवासियों का सामूहिक दायित्व भी है। देश के हर नागरिक में सैनिक जैसी चेतना अवश्य होनी चाहिए। प्रत्येक भारतीय के भीतर राष्ट्र प्रथम का भाव, अनुशासन और कर्तव्यनिष्ठा सदैव जागृत रहनी चाहिए।



**Amit Shah**
@AmitShah

'हर घर तिरंगा' अभियान ने पूरे देश को राष्ट्रीय भावना से जोड़ा है। इस वर्ष भी पूरे उत्साह और सम्मान के साथ इस अभियान को जन आंदोलन के रूप में आगे बढ़ाना है: PM श्री @narendramodi जी






**Nitin Gadkari**
@nitin_gadkari

महाराष्ट्र के भविष्य की कनेक्टिविटी का नया प्रतीक बनेगा तालेगांव-चाकण-शिक्रापुर कॉरिडोर!

#PragatiKaHighway #GatiShakti






**Nirmala Sitharaman Office**
@nsitharamanoffc

भारत में प्रतिभा और क्षमता की कोई कमी नहीं है। यही शक्ति इसे वैश्विक क्षमता केंद्रों (जीसीसी) के लिए एक पसंदीदा गंतव्य बनाती है।

दुनिया भर की कंपनियां भारतीय लोगों के कौशल, सृजनात्मकता और सूझ-बूझ के कारण यहां आ रही हैं।

कला, परंपरा और संस्कृति के क्षेत्रों में भी इसी प्रकार का एक बड़ा अवसर साकार होने की प्रतीक्षा कर रहा है।

भारत की कलात्मक विरासत एक ऐसी सुदृढ़ क्षमता है, जो वैश्विक बाजारों में अपनी पहचान बनाने के लिए पूरी तरह तैयार है।



**Kiren Rijiju**
@KirenRijiju

18 जुलाई को भारत के एक युवा स्टार्टअप ने एक बड़ी सिद्धी प्राप्त की है। विश्व के बहुत कम ही देश है, जहाँ इस प्रकार से प्राइवेट साहस हुए हैं और भारत के युवाओं ने अंतरिक्ष में उड़ान भरी है: माननीय प्रधानमंत्री श्री @narendramodi जी

#Parliament
#MonsoonSession2026

## Govt okays chemical parks scheme, expansion of K'taka-Andhra rly line

**Neha LM Tripathi**
letters@hindustantimes.com

**NEW DELHI:** The Union Cabinet on Friday approved the Bharat Audyogik Vikas Yojana Rasayan (BHAVYA Rasayan) scheme with a financial outlay of ₹3,030 crore to establish three dedicated chemical parks across the country.

The scheme, which was announced in the Union Budget for FY2026-27, will have a total outlay of ₹3,030 crore, including ₹3,000 crore for developing common infrastructure and basic utilities inside the parks and ₹30 crore towards administrative expenditure.

The scheme will be implemented over five years, from FY2026-27 to FY2030-31.

"The Centre would provide a grant of up to ₹1,000 crore per park. This will be subject to a minimum contribution of ₹500 crore by the concerned State Govern-

THE BHAVYA RASAYAN SCHEME HAS AN OUTLAY OF ₹3,030 CRORE, WHILE THE RAIL LINE ON BALLARI – GUNTAKAL SECTION WILL BE BUILT AT THE COST OF ₹1,264 CRORE

BHAVYA-Rasayan Scheme marks an important step towards strengthening India's chemical and petrochemical ecosystem," Prime Minister Narendra Modi said on X.

In another decision, the Cabinet Committee on Economic Affairs, chaired by Prime Minister Narendra Modi, on Friday approved the construction of a 3rd and 4th rail line on the Ballari

The project covering three districts across Karnataka and Andhra Pradesh will increase the existing Indian Railways network by about 46 km, the government said.

"The proposed multi-tracking project will enhance connectivity to approximately 99 villages, which are having a population of about seven lakhs . The capacity enhancement will improve rail connectivity to several prominent tourist destinations across the country, including Ballari Fort, Sri Kumara Swamy Temple" a statement from the government said.

It also stated that the proposed project is an essential route for transporting commodities such as iron ore, dolomite, limestone, iron and steel, coal, fertilizers, and food grains.

"The capacity augmentation works will result in additional freight traffic of magnitude 16.22 Million Tonnes Per Annum," the

## Sarnath now India's 45th World Heritage site



UNESCO described Sarnath as one of four principal Buddhist pilgrimage sites identified by the Buddha himself. UNESCO

**HT Correspondent**
letters@hindustantimes.com

**VARANASI:** Twenty-eight years after entering UNESCO's Tentative List, Sarnath in Uttar Pradesh has made it on the UNESCO World Heritage List.

The site, where Gautama Buddha is believed to have delivered his first sermon after attaining enlightenment, has now become Uttar Pradesh's fourth and India's 45th World Heritage site.

Prime Minister Narendra Modi took to X to hail the designation. "A proud moment for every Indian! Delighted that Sarnath in Uttar Pradesh has been inscribed on the UNESCO World Heritage List," he said.

"This recognition celebrates India's profound civilisational and spiritual heritage. It will also inspire more people across the world to come to Sarnath and connect with the ideals of Lord Buddha," added the PM.

The move was announced during the 48th Session of the World Heritage Committee. UNESCO described the site as one of four principal Buddhist pilgrimage sites identified by the Buddha himself. "...After flourishing as a major Buddhist centre, Sarnath declined in the 12th century CE and fell into obscurity until its rediscovery in the 18th century," its website said.

Union culture minister Gajendra Singh Shekhawat also took to X on a jubilant note. "Sarnath reflects the profound spiritual and philosophical contributions of Indian civilisation to humanity."

State culture minister Jaiveer Singh said the achievement reflected Uttar Pradesh's effort to bring the many strands of its civilisational heritage into national and international focus.

Conservation architect Abha Narain Lambah, who prepared Sarnath's nomination, said it rested upon something larger than the significance of individual monuments. "Sarnath brings together the place of the First Sermon, the beginnings of the Buddhist Sangha, some of the earliest Buddhist architectural forms and a pilgrimage tradition spanning nearly 2,500 years," she said.

## PM's message to key ministries: Be youthful, dynamic and adaptable

TIMES NEWS NETWORK

**New Delhi:** PM Narendra Modi Tuesday told top officials of key economic ministries that govt must remain youthful and forward looking, a message that came days after he took to Instagram amid Gen Z-led protests against paper leaks.



"...a govt must always remain youthful, dynamic, forward-looking, continuously adapting to

aling with finance, commerce, industry and technology.

He also called for the active participation of young entrepreneurs in key sectors, while asking officials to devise courses in consultation with the industry so that the workforce is equipped with skills required in emerging sectors. While education institutions have been producing a large number of engineers, professionals and

The other strong message was on addressing disinformation. "PM also emphasised the importance of proactive communication on strategic sectors where the country is undertaking major initiatives, to counter misinformation and unfounded fears surrounding such efforts," the statement said.

He also underlined the need to keep citizens at the centre of every policy and decision. "Emphasising that reforms are not merely a fashio-

## Lok Sabha clears Bill to deal with exam leaks amid ruckus

**ASAD REHMAN & ANONNA DUTT**
New Delhi, July 29

**WRAPPING UP A** two-day debate punctuated by acrimonious exchanges as the Opposition mounted a sharp attack on the government over the police crackdown on student protesters in Delhi, the Lok Sabha on Wednesday passed the stringent Public Examination (Prevention of Unfair Means) Amendment Bill, 2026 by a voice vote amid sloganeering by the Opposition.

While Leader of Opposition Rahul Gandhi's remarks against Union Home Minister Amit Shah over the police crackdown led to stormy



Opposition MPs stage a protest in the Lok Sabha during the Monsoon session of Parliament, in New Delhi on Wednesday

## Thank you, friends: Modi woos youth again as Insta reel gets 303 million views

**NEW DELHI, JULY 24**

Prime Minister Narendra Modi on Friday posted his second Instagram reel in 24 hours after his midnight post on anti-paper leak measures garnered over 303 million views, setting a new world record on the social media platform. Modi also

Becomes most viewed on platform in 24 hours

curb paper leaks, Modi said, "Thank you, friends. Yesterday night I got a chance to meet you. Thanks for the response to the video and for

## PM chairs high-level meet with secretaries, focus on Viksit Bharat

**ENS Economic Bureau**
*New Delhi, July 28*

PRIME MINISTER Narendra Modi on Tuesday chaired the second high-level meeting with secretaries, with the focus on "accelerating progress towards the goals of Viksit Bharat", the Prime Minister's Office said in a statement.

While reviewing the agenda for ministries and departments dealing with finance and economy, commerce and industry, and technology sectors, the PM said that while significant investments are being made in infrastructure, equal priority has to be given to develop indigenous technologies and highlighted the importance of technological self-reliance and building domestic capabilities in critical sectors.

As per the statement, Modi also said new academic courses should be planned in partnership with industry so that the workforce has the skills required by emerging and future industries.

அடல் பிஹாரி வாஜ்பாய்நினைவு நாள்

மனப்பூர்வ அஞ்சலி (16 ஆகஸ்ட்)

# தேசத்தின் பாதுகாப்பு, பொது நலனுக்காக உறுதியுடன் நின்றார்

**கலாச்சாரத் தேசியத்தை தனது பணிக் கலாச்சாரத்தின் ஒரு பகுதியாகக் கொண்ட அடல் பிஹாரி வாஜ்பாய், தேசத்தின் பாதுகாப்பு, பொது நலனையே எல்லாவற்றிற்கும் மேலாகக் கருதினார். தனது தேசியவாதப் பார்வை, களங்கமற்ற நற்பெயர், நாட்டிற்காக அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கை ஆகியவற்றின் மூலம் இந்திய அரசியலில் அவர் அழியாத முத்திரையைப் பதித்தார். அணுசக்தி சோதனைகள், கார்கில் போர் ஆகியவற்றின் மூலம் வளர்ந்து வரும் இந்தியாவின் வலிமையை உலகிற்கு வெளிப்படுத்திய அதே வேளையில், நாட்டிற்குள் 'நல்லாட்சி' எனும் தொலைநோக்குப் பார்வையையும் அவர் நனவாக்கினார். அவரது தொலைநோக்குப் பார்வையும் குறிக்கோளும், 'வளர்ச்சியடைந்த இந்தியா'–வை உருவாக்கும் உறுதிப்பாட்டிற்குத் தொடர்ந்து வலிமை சேர்க்கும்...**



- போக்குவரத்து வசதி குறித்த அடல் அவர்களின் தொலைநோக்குப் பார்வை 21–ம் நூற்றாண்டின் இந்தியாவை பலப்படுத்தியது.
- வலுவான, வளமான, தன்னிறைவு பெற்ற இந்தியாவை உருவாக்குவதற்காக அவர் தனது வாழ்வை அர்ப்பணித்தார்.

*"முன்னாள் பிரதமரும் பாரத ரத்னாவுமான அடல் பிஹாரி வாஜ்பாய் நினைவு நாளில், அனைத்துக் குடிமக்கள் சார்பாகவும் அவருக்கு மரியாதைக்குரிய அஞ்சலிகள். நாட்டின் பன்முக வளர்ச்சிக்கு அவரின் அர்ப்பணிப்பும் சேவை மனப்பான்மையும், வளர்ச்சியடைந்த, தற்சார்பு கொண்ட இந்தியாவை உருவாக்குவதில் பங்களிக்க அனைவரையும் தொடர்ந்து ஊக்கப்படுத்துகின்றன.*

*– பிரதமர்*
*திரு. நரேந்திர மோடி.*

NEW INDIA SAMACHAR FORTNIGHTLY

RNI NO.: DELENG/2020/78811 AUGUST 16-31, 2026
RNI Registered No DELENG/2020/78811 (Publishing Date: August 04, 2026 Pages:

EDITOR IN CHIEF
Dhirendra Ojha
Principal Director General
Press Information Bureau, New Delhi

PUBLISHER:
Kanchan Prasad
Director General, on behalf of
Central Bureau Of Communication

PUBLISHED FROM:
Room No–278, Central Bureau Of Communication, 2nd Floor, Soochna Bhawan, New Delhi -110003